# தமிழரசு

1-5-1990 ரூ. 1



சென்னை, பெரம்பூர்த் தொகுதி, கன்னிகாபுரத்தில் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, டாக்டர் பொன்முடி, திரு. எஸ். தங்கவேலு, தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் ஆகியோர் உடன் உள்ளனர் (14.4.1990)






தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

சித்திரைத்திங்கள் - 18

மலர்:20 1-5-1990 இதழ்:21



## இந்த இதழில்...

பகுத்தறிவுக் கவிஞன்
—தந்தை பெரியார் ... 2

நமக்குக் கிடைத்த ஷெல்லி!
—அறிஞர் அண்ணா ... 3

புதுவைக்குயில் புரட்சிக் குயில்
—முதல்வர் கலைஞர் ... 4

பாவேந்தர் நினைவு போற்றுவோம்!
—மாண்புமிகு பேராசிரியர்
க. அன்பழகன் ... 6

கவிதைப் பெரியார்
—கவிஞர் பொன்னிவளவன் 8

எனது நாடு
—பாவேந்தர் பாரதிதாசன் ... 9

பாவேந்தர் பார்வையில் பெண்மை
—டாக்டர் சு. சிவகாமசுந்தரி ... 10

முகவரியைத் தந்தவன்
—கவிஞர் அப்துல் ரகுமான் ... 12

புரட்சிப் பாவலரின் புதிய பார்வை
—புலவர் சா. மருதவாணன் ... 13

புயல் வேகக் கவிஞர்
—கவிஞர் குடியரசு ... 15

மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்க!
—கவிஞர் அரிமதி தென்னகன் ... 16

தமிழுள்ளம் தாயுள்ளம்
—கவிஞர் மன்னர் மன்னன் ... 17

சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத்
திட்டப்பணிகள் தொடக்கவிழா ... 33

இலவச அரிசி வழங்கு விழா 37

சூரிய விளக்கே!
—கவிஞர் அரசு மணிமேகலை ... 39

புதுநெறி நிலைநாட்டுவோம்!
—கவிஞர் பொன்னடியான் ...

சீர்திருத்தக் கவிஞர்
—மன்னை நாராயணசாமி ... 41

பாரதிதாசனின் தமிழியக்கம் ... 47
— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அடுத்து வரும்

'தமிழரசு' இதழ்களிலும்

பாவேந்தர் குறித்த

எழுத்தோவியங்கள்

இடம் பெறும்.

பாவேந்தர் நூற்றாண்டுச் சிறப்பிதழ்

# பகுத்தறிவுக் கவிஞன்

## - தந்தை பெரியார்

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான் ,

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்லுவதற்கு இல்லை.



அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து- வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால், அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று - எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

பாரதிதாசன் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும்- பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களை எடுத்துப் பாட முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவர்க்குப் பாராட்டும், பெருமையும் அளிக்கவேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவுவாதியானபடியால் அவருடைய பணிக்குக்



கிடைக்க வேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப் போன்று புதிய கருத்துக்களை எடுத்துச் சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன் போல நமது நாட்டில் புரட்சிப் புலவர்கள் தோன்றி இருந்திருப்பார்களேயானால், நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்து வரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

*(சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில், 8.3.1973-இல் ஆற்றிய உரையிலிருந்து)*

# எவரின் தோள்கள்?

## - பாவேந்தர்



நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி!

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

# நமக்குக் கிடைத்த ஷெல்லி!

## —பேரறிஞர் அண்ணா

புரட்சிக் கவிஞர் 55-ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி 1946-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கவிஞர் மலரிலிருந்து.

**வா**னுலக வீதியிலே சுற்றி, தேவர் தம் வடி வழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர், அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார், நமது உலகில்தான் உலவுவார், நாம் காண்பனவற்றையே காண்பார். ஆனால், அவை களைப் பற்றி நாம் கூறத் தயங்குவோம் இயலாத தால்; அவர் கூறுவார், அறிவுத் தெளிவால், கலைத்திறனால்; இந்தப் புரட்சியைச் செய்தார் பாரதிதாசன்.

புரட்சித் துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும், துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை. புன்மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றி கரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப் பின் விளைவாகப் புன்மொழி, மாரி போல் பொழியத்தானே செய்யும்?

பாரதிதாசன், இந்த மாரியைச் சட்டை செய்ய வில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட்டுக் கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர் பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவருடைய கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண் டார்கள். புரிந்து கொண்டார்கள், ரசிக்கிறார்கள், பயன் பெறுகிறார்கள்.

நாளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணும் போதுதான், ''புரட்சிக் கவிஞரே பாரதிதாசன்; ஐயமில்லை'' என்று அனைவரும் கூறமுடிகிறது. அவர் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டி விட்டுக் கூப்பிடுகிறார்.

''கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே''

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி, கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட் போரின் வளைந்த முதுகை நிமிர்த்தி விடும் வீரக் குரலாகிவிட்டது! எனவே தான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார், நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார், நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார், அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றி யினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடு கூறுகிறது.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப் படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வோர் காசும் பேசக்கூடுமானால் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை; அதனால் சமுதாயம் பெற்ற பெருமையை- பொற்காசுகள் பேசினாலும் கூட புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது - எப்படிப் புகும்? அவருடைய செவியிலே ஆலைச்சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட்டாளியின் குமுறல், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர்பார்த்து ஏங்கும் ஏழையின் ஏக்க மொழி, எழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டை விடும் கிழ மணாளனைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறும் ஒலி இவை புகுந்து, கண்களிலே அனலையும் புனலையும் கிளப்பி விட, ''எடா! தம்பி! எடடா பேனா! கொண்டு வா மைக்கூடு; இந்தக் கொடுமைகளைக் களைந்தேயாக வேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும்'' என்று முழக்க மிடுகிறார்! அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்கு அளித்த அழியாத செல்வம்; அவர் வாழ்க! வெல்க!

**பாவேந்தர் அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொற்கிழி அளித்தல்**
(24.7.1946).



# புதுவைக் குயில்



**பா**ளைச்சிரிப்பு, பசு நெய்யின் நறுமணம், வாளைமீன் துள்ளல், வரிப்புலியின் கனல் பார்வை எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம். பாரதிதாசனோ, 'பாற்கடலாகவே' பரந்து விரிந்து, தமிழ்மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

அந்தக் கடலிலே உவமையழகு, உணர்ச்சித் துடிப்பு, புதுமை நோக்கு, புரட்சி வெடிப்பு அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப்பாய்ந்தன. சிலம்பமும் ஆடின. அவருடைய உருவமே மிடுக்கானது, அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய சொல்லாட்சியோ, எல்லாவற்றையும்விட மிடுக்கானது- இழிதகைமையை, ஈனச்செயல்களை மிதித்துத் துவட்டக் கூடியது.

**''கொலைவாளினை எடடா-மிகு**
**கொடியோர் செயல் அறவே!''**

என்பன போன்ற புரட்சி தெறித்திடும் வரிகளை இன்னொருவரால் புனைந்திடத்தான் முடியுமா.

**''சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு**
**தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி**
**நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த**
**நிறையுழைப்புத் தோள்கள்எலாம் எவரின்**
**தோள்கள்?**

எனக்கேட்டு,

**''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்**
**காணத் தகுந்தது வறுமையா?**
**பூணத் தகுந்தது பொறுமையா?''**

என்றெல்லாம் தொழிலாளர் தோழராய் உரத்த குரல் எழுப்பிச் சமதர்மப் பூங்காவைச் சமைத்திட அவர் துடித்த துடிப்பினை யாரே மறுத்திட முடியும்?

**'தட்டுப்ப டாத பெரும்-பொருட்கொரு**
**சாதியும் உண்டோடா!- படுவாய்**
**சாதியும் உண்டோடா!**
**மட்டற்ற செம்பொருட்கே- முரண்படும்**
**மதங்கள் உண்டோடா!'**

என்று சாதிச் சழக்குகளைச்- சாத்திரச் சடங்குகளை ஆத்திரத்துடன் சாடிய ஆண்மையாளர்- அரிமாவும்- அவரே!

**'கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே, இங்கு**
**வேரில் பழுத்த பலா! - மிக்க**
**கொடியதென் றெண்ணிடப்**
**பட்ட தண்ணே- குளிர்**
**வடிகின்ற வட்டநிலா!'**

-என்று பெண்டிர்க்காகக் கண்ணீர் வடித்திட்ட பேரன்புத் தாயுமாவார் அவர்!

முதல்வர் கலைஞர்

**தமிழ் எங்கள் உயிர் என்பதாலே- வெல்லுந்**
**தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!'**

என்று போர்ப் பரணி பாடிய வீர மறவரும் அவரே ஆவார்!

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னாலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை, அதனை வாழ்த்திடும் முகத்தான் அவர் வரைந்தனுப்பிய வீரங் கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங்காய்ந்திடாமல் எழுச்சியை-இன மொழி, நாட்டுப்பற்றினைச்- சூடேற்றிய வண்ணமே உள்ளன.

# புரட்சிக் குயில்



நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம் பாட வந்த மறவன்; புதிய
அறம் பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து'!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!'

என்றெல்லாம் அவர் பாரதியாரைப் பற்றிப் பாடினாலும் அந்த வைர வரிகள் தமக்கே பொருந்து மாறு வாழ்ந்து காட்டிய பாவலர்.

பாரதி-பாடென்று சொன்னவுடன்
பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி
புகழ்ந்த புலவன்......
கனக சுப்புரத்தினம் என்று
காத தூரம் இருந்த பெயரைக்
கவி பாரதிக்குத் தாசனென்று
கச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான்!
நிமிர்ந்த நோக்கு, நெரித்த புருவம்;
நீர் வீழ்ச்சி ஓசை, நெற்கதிர்க் கட்டு மீசை;
பாட்டெழுதும் வித்தையிலே பாரதி ரசவாதம்
கற்றவனாம்-இவனைப்
பார், அதிரசவாதம் கற்றவனாம்!
அத்துணை இனிப்பு; இவன் பாட்டில்!
வினாக்குறியா? வெடிக்கும் எரி மலையா?
புரட்சிக்கவிஞனெனப் புவியொப்பி மாலை
போடப்போதாதோ இவைகள்?
இவனோர் சுருட்டுக்கவிஞன்- புகைச்
சுருட்டுக்கவிஞன்- இவன்
புரட்டுக் கவிஞனாவான்;
மூடப் பழக்கமெலாம் தலைகீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்...
அமளி துமளி ஆர்ப்பாட்டம்! அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப் புதுவைக்குயில்
கூவாதோ!

கருத்துக்கவிஞன்; கூற்றுக்
கருத்த கவிஞன்;
காலக்கவிஞன், முக்
காலக் கவிஞன் அவன்!
சுவையாய்த் தமிழுக்கு
அருவியின் பாடல் அமைவாய்க் கண்ட
அற்புதம் என்னே!

இருண்ட வீட்டில் குடும்ப விளக்கைஏற்றி
வைத்தார்
இசையமுது பொழிந்து,
அதற்குப் பாண்டியன் பரிசு பெற்றார்!

நமக்குக் குயில், குறிஞ்சித் திட்டுமுண்டு.
இதழ் நடத்தும் போது கவிதை;
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்து விட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்
அவர் காதல் நினைவாலே கவிப்பெண்ணை
வாடவிட்டு
சாவின் எதிர்பாரா முத்தத்தால் பிரிந்து விட்டார்!
என் ஆசான்!...

பம்பாயில் நடைபெற்ற கவியரங்கில் பாரதி தாசனைப் பற்றி நான் பாடிய கவிதை வரிகளில் சிலவே இவை!

பகுத்தறிவு புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்து விட்டு அவர் போய்விட்டார். 'பாரதிதாசன்' என்பது இனி ஒரு த்னி மனிதரின் பெயரல்ல. தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர். அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்!



- தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பலவகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

- அச்சம் தவிர்ந்தது வாழ்வு- நல்
அன்பின் விளைவது வாழ்வு!
மச்சினில் வாழ்பவ ரேனும்- அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!



# பாவேந்தர் நினைவு போற்றுவோம்

மாண்புமிகு கல்வியமைச்சர்

பேராசிரியர் க. அன்பழகன்

தமிழ் மொழி மறுமலர்ச்சி - கவிதை எழுச்சி ஆகியவற்றை உருவாக்கியவர் என்ற தகுதியால் தமிழ் நாட்டின் வரலாற்றில் தமக்கென ஓர் அழியாத இடத்தை—நீங்காத புகழ் ஒளியைப் பெற்ற பெருமைக்குரியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

கண் மூடிகளாக - கருத்துக் குருடர்களாக-தம்மையே இழிபிறவிகளாக எண்ணிக் கிடந்த ஏமாளிகளான தமிழ் மக்களை அறிவுக் கண் திறந்து காணச் செய்த கவிஞரின் - உணர்வுகள், முழக்கங்கள், பாட்டு வரிகள், பகுத்தறிவு விளக்கங்கள், சாதி சமய மூட நம்பிக்கைகளைச் சாடிய கேள்விக் கணைகள் - யாவும் இன்றும் நமது உள்ளங்களில் ஒலித்துக் கொண்டுள்ளன. தமிழன் என்று ஒருவன் வாழ்ந்திடும் காலம் வரை - அவை ஒலித்துக் கொண்டிருக்கும் தகுதியுடையன.

புரட்சிக் கவிஞரின் கவிதை - தமிழ் உள்ளளவும் வாழும்; அவர் உருவாக்கிய கவிதை மரபும் வாழும்! அவர் தம் வழி வழி வளரும் கவிஞர் தலைமுறையும் வளரும்.

ஆயினும், புரட்சிக் கவிஞர் ஊட்டிய உணர்வுகளை, வளர்த்த சிந்தனைகளை, வாழ்வித்த இனப்பற்றை, மலர்வித்த மொழி ஆர்வத்தை, வடித்த கற்பனையை, தொடுத்த உவமைகளை, தீட்டிய இயற்கையை, வழங்கிய செஞ்சொற்களை, முழங்கிய பாநடையை, அவரது கவிதையைச் சுவைப்பதாலன்றி வேறு வகையால் பெறுதல் இல்லை.

அப் பாவேந்தரின் நிலைபெற்ற தோற்றமே, அழியாத வடிவாம். புரட்சிக் கவிஞர் உயிர் புகுந்த ஓவியமே அந்தக் கவிதைகள் தாம்! அவை நம்மோடு வாழ்பவையே, நமக்காகப் பிறந்தவையே! அவையெல்லாம் நம்மினத்தின் வாழ்விற்காகத்தான்! நம்மை வாழவைப்பதற்காகத்தான்! எனவே, பாவேந்தர் இன்றும் வலம் வருகிறார், அவரது கவிதை வடிவில்! நம்மோடு உரையாடுகிறார், பாட்டு நடையில்! நமக்கு உணர்வூட்டுகிறார், அவற்றைப் படிக்கும் நிலையில்! ஆம்; அந்தக் கவிஞரின் கவிதைகளைப் போற்றிடும் கடமையைச் செய்வதிலேதான் - தமிழ் இனக் காப்புக்கு ஏற்ற அரண் கண்டவர்களாவோம் என்பதை நாம் மறத்தலாகாது.

அவரது நினைவு போற்றுங் கடமை தமிழர்க்கு எந்நாளும் உரியது எனினும், இந்நாளில் (ஏப்.29) நாடெங்கும் கொண்டாடுவது நமது கடமை. கவிஞரிடையே - 'அரிமா' எனவும், புலவர்களிடையே 'தமிழ்க் களிறு' எனவும், பகுத்தறிவாளர்களிடையே - 'ஏறு' எனவும் வலம் வந்த பாவேந்தரிடம் நான் பழகும் வாய்ப்புப் பெற்ற நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

1940-ஆம் ஆண்டு, நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தேன். சிதம்பரத்தில் என் தந்தையார் ஒரு தொழில் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் புவனகிரி செல்லும் வழியில் - புரட்சிக் கவிஞர் எங்கள் இல்லம் வந்தார். அவரது புவனகிரி (பெருமாத்தூர்) நண்பர்கள் பலர் - என் தந்தையாரிடம் மதிப்புடன் பழகி வந்தனர். அவர்கள் என் தந்தையாரைப் பற்றிக் கூறியிருந்ததனால், கவிஞர் வந்தார். என் தந்தையார், அவரது தோற்றத்தைப் பார்த்தவுடனேயே - அவர் யார் என்பதைப் புரிந்துகொண்டு 'வாங்க, வாங்க, கவிஞரே!' என்று ஆர்வத்துடன் வரவேற்றார். பின்னர் இருவரும் - தன்மான இயக்கம் - இந்தி எதிர்ப்பு - முதலானவைபற்றி உரையாடிக்

கொண்டிருந்தனர். பின்னர் உணவருந்தினர். எங்கள் இல்லம் என்பதால் சைவ உணவையும் (வேறு வழியில்லை என்று) மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொண்டார். அப்பொழுதுதான் அவரை நெருங்கிக் கண்டேன். உணவு முடிந்ததும் சிகரெட் வாங்கிவரச் சொன்னார். வாங்கிவந்து கொடுத்தேன்! 'நீ என்ன படிக்கிறே?' என்றார். பல்கலைக் கழகத்தில் முதலாண்டு (இண்டர்மீடியட்) என்றேன். உடனே மகிழ்ச்சியோடு 'பலே பலே - அப்படித்தான் படி. அந்தப் பயல்களுக்கெல்லாம் நமது திறமையைக் காட்டணும் - நல்லா படி' என்று அன்போடு கூறினார். அதுவே அவரிடம் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு.

அடுத்த ஆண்டு, திராவிட இயக்கச் சார்புடைய ஒரு வணிகர் மறைந்ததையொட்டி நடத்தப்பட்ட நீத்தார் நினைவு நாள் நிகழ்ச்சியில் அவர் தலைமை ஏற்றிட இசைந்து, சிதம்பரம் வந்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய பலருள் நானும் ஒருவன். நான் ஓர் இளம் மாணவனாக இருந்து, தடையின்றி, தயக்கமின்றித் தொடர்ந்து பேசியது அவருக்கு ஒரு வகையில் வியப்பினை ஏற்படுத்தி இருந்தது.

பின்னர் பாவேந்தர் பேசுகையில், ''ஏதோ மாணவன் அன்பழகன் பேசப் போகிறான் என்று சொன்னேன். பேச்சா இது - பேச்சு இப்படியா? மூச்சு விடக்கூட நேரம் வேண்டாமா?'' என்று சொல்லிவிட்டு,

''என் நண்பர் கல்யாண சுந்தரம் (மணவழகனார்) தந்த கொள்கைப் பயிற்சி! இப்படித்தான் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஆமாம் - அப்படித்தான்'' என்றார்.

அன்று கவிஞர் தங்கியிருந்த இடத்தில் அவருடன் இருந்து உரையாடி மகிழ்ந்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரைக் குறித்தும், தன்மானக் கொள்கைக்குள்ள ஆதரவு நிலை குறித்தும் ஆர்வத்தோடு கேட்டரர். நான் அறிந்தவற்றைக் கூறினேன்.

பாடாத தேனீக்கள்,
உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு
பார்த்த துண்டோ?



அந்த ஆண்டில் - புதுச்சேரியில் சிறப்புடன் நடைபெற்று வந்த ஒரு தமிழ்ச் சங்கத்தில் கல்லூரி மாணவர்கட்கு எனக் கட்டுரைப் போட்டியும், பேச்சுப் போட்டியும் நடைபெற்றன. அதில் நானும் - அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் சிலரும் கலந்து கொண்டோம். பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள நான் சென்ற போது, புதுவை இயக்கத் தோழர் புவனகிரி இராமலிங்கம் அவர்களுடன் கவிஞர் இல்லம் சென்றேன். அன்பாக வரவேற்று என்னுடைய ஆர்வத்தை வாழ்த்தினார். அந்தப் போட்டிகளில் - பேச்சு - கட்டுரை இரண்டிலும் எனக்கு முதற் பரிசுகள் அறிவிக்கப்பட்டன. அதைக் கேட்டு - கவிஞர்க்குப் பெரு மகிழ்ச்சி; நண்பர்களிடம் எல்லாம் அதையே சொல்லிச் சொல்லி, 'தன்மான இயக்கத்தவர் தரம் எப்படி? என்று கேட்டார்.

அடுத்த நாள் மாலை அங்கிருந்த பிரெஞ்சு ஆட்சியின் ஆளுநர் பரிசுகள் வழங்க இசைந்திருந்தார்; மாலை ஆறு மணிக்கு நிகழ்ச்சி. மாலை ஐந்து மணிக்குக் கவிஞருக்கு ஒரு திடீர் எண்ணம் ஏற்பட்டு 'நீ பூட்ஸ் (காலணி) போடாமல் கவர்னரிடம் சென்று பரிசு பெறுவது நன்றாக இராது; எனவே, உடனே சென்று பூட்ஸ் வாங்கி வர வேண்டும்' என்றார். நான் தயங்கினேன். அவரே என்னையும் அழைத்துக் கொண்டுகடைத் தெருவுக்குச் சென்றார். கடைகளில் ஏறி இறங்கி அளவு சரியாகப் பார்த்து வாங்கிக் கொண்டு திரும்புவதில், எப்படியோ காலம் தாழ்ந்து ஆறரை மணி அளவில்தான் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆளுநர் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு -'முதல் பரிசுகள் இரண்டும் பெறுகின்ற மாணவனே வந்து சேரவில்லையே'- என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார். எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டது என்றாலும் அதைவிட, அந்தச் சங்கத்தாருக்கு ஏமாற்றம் ஏற்படக்காரணமாகி விட்டோமே என்பதை எண்ணி வருந்தினேன்; பின்னர் கவிஞரைக் காணச் சென்றேன். அவரும் அதைக் கேட்டு வருந்தினார். ஆனால் உடனே ஆறுதலும் கூறி, ஊருக்கு அனுப்பிவைத்தார். புதுவைச் சங்கத்தாரும் பரிசுகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். இருபது ஆண்டுகளுக்குப் பின் - அப்பொழுது நான் எழுதிப் பரிசு பெற்ற கட்டுரையைக் கூட எனக்கு அவர்கள் அனுப்பி வைத்தனர் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்!

# கவிதைப் பெரியார்



கவியரசர் பொன்னிவளவன்

பாரதி தாசனே! பாட்டுத் தலைவரே!
நேரசை நிரையசை நிலைதெரிந் தவரே!
மானிடக் கவிக்கனா மனிதரே! செந்தமிழ்த்
தேனிடம் இனிப்பாய்த் திகழ்ந்துநின் றவரே!
கனலின் துண்டு கற்கண் டானது;
அனலின் கொழுந்தில் அல்லியின் குளிர்ச்சி;
தூக்கப் படுக்கையில் ஊக்கத் துடிப்பு!
ஆக்கிப் படைத்தீர் அழகின் சிரிப்பு!
இப்படி அப்படி எப்படி யெல்லாம்
செப்படி வித்தைகள் செய்திருக் கின்றீர்!
நிமிர்ந்துநின் றெரிந்த நெருப்பே! உம்முன்
அமர்ந்தவர் ஒருசிலர்! அடிமைத் தனத்தை
ஒழிக்க முனைந்தீர்; ஒழிக்க முடிந்ததா?
நாங்கள் தமிழின் அடிமைகள்; தமிழால்
நீங்கள் எங்களை அடிமைப் படுத்தினீர்!
உம்கவித் திறனால் உம்முன் தமிழரைக்
கைகட்டி நிற்க வைத்த கவிஞரே!
நிற்கவைத் தீரே; நியாயமா? எங்களைக்
கற்க வைத்தநீர் கவிதைப் பெரியார்!
உயிரே! தமிழின் உயிரே! கவிதையால்
உயரலாம் எனும்நிலை உம்மால் பிறந்தது!
மனிதராய்ப் பிறந்த சிங்கமே! கவிதைக்
கணிதமே! நாத்திகப் புனிதமே! எங்களின்
எழுத்துநீர்; அசைநீர்; சீர்நீர்; தளைநீர்;
அடிநீர்; தொடைநீர்; பாநீர்! என்றும்
வல்லினம் மெல்லினம் இடையினம் என்னும்
மூவினம் கொண்டநம் முத்தமிழ்த் தாய்க்குப்
பாவினம்- உமக்கொரு பாட்டுப் பரம்பரை
கண்டிருக் கின்ற கவிவிஞ் ஞானியே!
இனத்தை மொழியைக் காப்பதே கடன்எனும்
மனத்தைத் தந்தீர்; மதிக்கின் றேனே!





# எனது நாடு

## பாவேந்தர் பாரதிதாசன்

என்னருமைத் தேசம்
எழில்பா ரததேசம்
பொன்னும் பொருளும்
பொருந்தும் பழநாடு!

கங்கை பெருகும்;
கலகலென ஓசைவரும்!
அங்கு மணிப்பறவை
அத்தனையும் பண்பாடும்!

தூய இமயமலை
வானைத் தொடும்! சிந்து
பாயும் ஒருபால்!
பழமரங்கள் ஓங்கும்!

நதிகள் சமுத்திரத்தை
நண்ணும்! கரையில்
நிதிகள் கொழிக்கும்!
நிறைகப்பல் நீர்மிதக்கும்!

பூக்கள், மகரந்தம்,
பூந்தேன், புதியமணம்,
ஈக்கள் சதாகீதம்
என்னென்ன இன்பங்கள்!

வெள்ளைமலை போற்பசுக்கள்
வேண்டுமட்டும் பால்கொடுக்கும்!
அள்ளும் தயிர்நறுநெய்
ஆர்ந்து கிடக்குமிங்கே!

தென்றல் சிலிர்க்க வரும்
செவ்விளநீர் தித்திக்கும்!
மன்றல்லுறு தாமரைகள்
வாவியெலாம் பூத்திருக்கும்!

செந்நெல், கரும்பு,
செழும்பலா, தேன்கதலி,
எந்நலமும் வற்றாச்
சமுத்திரம்போல் இங்குண்டு!

தேனென்று பாலென்று
சேல் விழியார் வாய்முத்தந்
தானென்று சொல்லும்
தமிழ்க்கவிதை யெல்லாம்

புகழ்க்கூட்டம் செய்து,
புனிதத் தமிழர்
அகத்தே உயிராகி
ஆர்ந்து கிடக்குதிங்கே!

வீடுதொறும் நல்லறஞ்செய்
வெண்கைசேர் பெண்களெலாம்
பாடுதொறும் இன்பஞ்செய்
பச்சைப் பசுங்குயில்கள்!

ஈர முடையார்;
எவர்க்கும் நலம்புரிவர்;
வீரர்; பகைக்குலத்தை
வேரறுப்போர் ஆடுவார்கள்!

கோலமுப் பத்தைந்து
கோடி குலமக்கள்
காலம்பார்க் கின்றார்கள்
கட்கத்தை ஓச்சுதற்கு!

சாதி யனைத்தும்
சமன்செய்தார்; புன்மதத்தால்
மோதி யழியாமே
முன்னேறிச் செல்கின்றார்;

கண்ணினிக்கும் காட்சிகளைப்
பாடும் கவிஞரெலாம்
பெண்ணினத்தை இங்கே
பெரிதென்று பாடுகின்றார்!

மூட வழக்குக்கு
முடிவளித்தார்; பேதமெனும்
காடழிக்க நல்லறிவுக்
கோடாரியைக் கைப்பிடித்தார்!

எங்கும் புதிய
எழுச்சி இலகினதால்
அங்கே பகைவரெலாம்
அங்கம் நடுங்குகின்றார்!

நானிலத்தார் இன்பமெலாம்
நன்றி நுகர்வதற்குத்
தேனென் றினிக்கும்
எனது திருநாடு

தூக்குந்தோள், வில்லில்
தொடுக்குங்கோல், நல்லறத்தால்
ஆக்கும்போர், நெஞ்சில்
அடக்கும் மூச் சுகளெல்லாம்

வெல்கவெல்க! என்நாடு
வெல்க! உரிமையெலாம்
மல்கநலம் அத்தனையும்
வாய்ந்து.

*(1936-ல் எழுதியது)*

# பாவேந்தர் பார்வையில் பெண்மை


## டாக்டர். சு. சிவகாமசுந்தரி

**சிறப்புநிலைப் பேராசிரியர்**
**இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்**


**பெ**ண்மையில் பாரதிதாசன் கண்ட புரட்சி-கால வெள்ளத்துடன் எதிர் நீச்சலடித்து, கவிதைக் கரையைத் தொட்டுவிட்ட பெரும் புரட்சியாகும்.

பாரதிதாசனின் பெண், அதிகம் பேசவில்லை. அந்தப் பெண்ணின் சார்பில் கவிஞர் பேசுகின்றார். சங்க இலக்கியத் தமிழ் மரபில் ஊறிவந்த பாவேந்தர், பகுத்தறிவுப் பாசறையின் புதுமைத் தமிழச்சியாகத் தன் காலத்தில் பெண் விளங்க வேண்டுமென்பதைத் தன் எழுத்துக்கள், பாத்திரங்கள் அனைத்திலும் அடிச்சரடாக அமைத்துக் காட்டுகிறார்.

''கோட்டைப் பவுன் உருக்கிச் செய்த
குத்து விளக்குகள் போன்ற குழந்தைகளைப்''
பெற்றுக் கொடுப்பது மட்டும் பெண்ணின் பணியல்ல.

''வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று'' உறுதியாகச் சொல்லக் கூடியவளாகப் பெண் வளரவேண்டும்.

''அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியல்''
பெண், ''தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவள்.'' ஆனால்,

''கல்வியில்லை உரிமையில்லை
பெண்களுக்கு,
கடைத்தேற வழியின்றி
விழிக்கின்றார்கள்''

என்ற நிலையில் தடுமாறித் தவித்து நிற்கின்றாள். எனவேதான் அவளைக் கடிகாரம் ஓடுமுன் அண்டை வீட்டுப் பெண்களோடு சேர்ந்து, தலை வாரிப் பூச்சூடிக் கொண்டு பாடசாலைக்குச் செல்ல வேண்டுகிறார். கடல் சூழ்ந்த தமிழ்நாடு முழுவதும் ''பெண்கல்வி பெண்கல்வி'' என்ற ஓசை விண்ணையும் தாண்டி ஒலித்து முழங்க வேண்டும்.

''குப்பை மணக்கக் குடித் தெருவெல் லாம்மணக்க அப்பம் நிலாப்போல் அடுக்கி வைக்க''வும் பெண்ணுக்குக் கல்வி வேண்டும். அவளால் மட்டுமே ''வாழ்க வையகம்'' என்று வாழ்த்திப்பாடி மற்றவர்களையும் பணி செய்யத் தூண்ட முடியும்.

குடும்பவிளக்கு அவரது புரட்சி மனத்தில் எழுந்த உண்மைக் காவியமாகத் திகழ்கின்றது. தன்னிலை தன்னை விட்டோட, அதைத் தான் தொடர்ந்தே பற்றி வரும் மின்னலைப்போலப் பெண்மைக்குக் கவிமாலை சூட்டிப்பாவேந்தர் மகிழ்கின்றாரெனில் மிகையில்லை.

இளமை மணத்தை, இரண்டாந்தாரமாகப் பெண் வாழ்க்கைப் படுவதைக் கண்டிக்கும் பாவேந்தர், விதவை மணத்தை வரவேற்கின்றார். அவலச் சுவையின் பேரருவியாய், பெருங்காடாய் குழந்தை மணத்தின் கொடுமையை, ஏழுவயதுச் சிறுமியின்- கூவத்தெரியாத குஞ்சின் குரலை- தாவாச் சிறுமானின் துயரத்தை- மோவா அரும்பின் துயரத்தைப் பாவேந்தர் கண்ணின் நீர் பெருக விவரிப்பார். கணவனை இழந்த சிறுமி, கைம் பெண்ணாகத் தந்தை வீட்டில் இருக்கின்றாள். மனைவியை இழந்த அவள் தந்தை, மறுமணம் புரிந்து, பழமையை மறந்து, ஏழுவயதில் தன் கணவனை இழந்த மகள் நிலையையும் மறந்து, புதிய மனைவியோடு மகிழ்ந்திருக்கின்றார். இதையெல்லாம் கவனித்த ஏழுவயது விதவைச் சிறுமி தேம்பி அழுத வண்ணம் தன் பாட்டியிடம் கூறுகின்றாள்.

''கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே வேரிற் பழுத்த பலா'' எனக் காட்டி, நம் சிந்தனையைத் தூண்டி விடுகின்றார். அத்துடன் தேம்பி அழும் குழந்தையை அழைத்துத் திடங் கொண்டு போராட, மாற்று வழியையும் காட்டுகின்றார்.

பொருந்தா மணத்தை எதிர்க்கும் பாவேந்தரின் இளம் பெண்ணும் பெரியதொரு போராட்டத்திற்குத் தயாராகின்றாள். கண் குழிந்த நரைத் தலைக் கிழவனுக்கும், இள நங்கைக்கும் திருமணம் நடத்தப்பட்டுவிட்டது. சொல்லத் துணிவின்றிப் பெண்ணைக் கூட்டிவைத்த திருமண வாழ்க்கையைத் தாய் காணுகின்றாள்.



**துன்பம் பிறர்க்குநல் இன்பம் தமக்கெனும்**
**துட்ட மனோபாவம்**
**அன்பினை மாய்க்கும் அறங்குலைக் கும்நல்ல**
**ஆக்கம் தனைக்கெடுக்கும்!**

''இளமை ததும்ப எழிலும் ததும்ப
காதல் ததும்பக் கண்ணீர் ததும்பி
என்மகள் கிழவ னருகில் இருந்தாள்.''

வாயின் கடையில் எச்சில் வழியக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். நேரம் நகர்ந்தது.

''தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள்''

பால் செம்பை எடுத்தாள் இடையில் செருகியிருந்த சிமிழை எடுத்து அதில் ஏதையோ கொட்டினாள். அருந்தப்போகும் சமயம் தாய் வந்து தடுத்தாள். பால்சிந்த அதனைப் பூனை குடிக்க, அது செத்து விழுகிற, பெண்ணின் பரிதாப நிலையைக் குறிப்பிடும் புரட்சிக்கவிஞர் அவளுக்குரிய விடுதலை மார்க்கத்தை வெளிப் படுத்துகின்றார்.

பிறிதொரு வேளை, தனித்து வரும் பெண்ணை மடக்குகின்றான் 'தறிகெட்ட' காளை ஒருவன். புரட்சிக் கவிஞர் அந்தப் பெண்ணுக்கு அறிவுரை கூறுகின்ற இங்கு பாவேந்தர், ஒரு புதிய கோணத்தில் புதுமைப் பெண்ணைப் பழக்கப்படுத்த எண்ணுகின்றார்.

''தனித்து வரும்போது- கெட்ட
தறுதலை கண் வைத்தால்
இனிக்க நலம் கூறு- பெண்ணே
இல்லாவிடில் தாக்கு!''

பெண்கூறும் இனிய அறவுரைக்கு முதலிடமும் ஏற்காவிடில் வன்முறைக்கு மறுஇடமும் கொடுக்கின்றார். ''எழுச்சியுற்ற பெண்களில்'' மீண்டும் ஒரு காட்சி! பெண் கூறும் இனிய உரையைத் தறுதலை ஏற்கவில்லை. எனவே,

''ஒரு கையில் உடைவாளும்
இடது கையில்
''ஓடிப் போ'' என்னு மொரு
குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி
விழித்து......''

அவனை விரட்டுகின்ற பாரதிதாசனின் புதுமைப் பெண், புதிய விடுதலைக்கு வித்திட்டு வளருகின்றாள்.

பாவேந்தரின் கவிதை வாழ்வின் வெற்றிக்குக் காரணம், அவர் பெண்மையை வாழ்த்தி, வணங்கிப் போற்றிப் பாராட்டியது தானெனின் அதுதான் உண்மை.

கருத்துக்களாலும், கவிதைத் திறத்தாலும் பாரதிதாசன் கூறும் முடிந்த கருத்து, ''பெண்கள் அருளொளி கறங்கு வெண்டிரை வையகம் காக்கும்'' என்பதே. பெண்மையை வணங்கிப் புதுமைப் பெண்ணுக்குப் பாரதி வகுத்தது இலக்கணம்; பாவேந்தர் படைத்தது இலக்கியம்!


TNPSC

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2

தேர்வாணையத்தால் 1990, ஜனவரி 31-ல் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையில் தமிழ்நாடு வேளாண்மை சார்நிலைப் பணியில் தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களில் பதிவெண்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும்; நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு, தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 8 | 11 | 16 | 17 | 19 | 20 |
| 21 | 23 | 24 | 25 | 26 | 27 | 35 | 38 | 39 |
| 43 | 44 | 48 | 51 | 52 | 53 | 54 | 56 | 59 |
| 61 | 62 | 63 | 65 | 66 | 67 | 68 | 70 | 72 |
| 73 | 76 | 78 | 79 | 80 | 81 | 84 | 85 | 87 |
| 89 | 90 | 93 | 94 | 97 | 101 | 107 | 118 | 120 |
| 122 | 125 | 127 | 134 | 135 | 136 | 138 | 140 | 143 |
| 145 | 147 | 148 | 149 | 157 | 170 | 172 | 174 | 179 |
| 180 | | | | | | | | |

DIPR/924/MS/90/MCS



# முகவரியைத் தந்தவன்

அந்தப் புரங்களில்
ஆடுகின்ற பெண்ணாய்
வீணாக்கி வைத்த
விலாசக் கவிதையினை
ஆணாக்கி வைத்தவனே!
ஆர்ப்பாட்டப் பாவேந்தே!

இருட்டுகளை எப்போதும்
எதிர்த்துவந்த ஒளிநிலவே!
உனக்கு
அமாவாசை என்ற
ஆபத்தே இருந்ததில்லை
ஏனெனில்
ஈரோட்டுச் சூரியனில்
எரிசுடரைப் பெற்றவன் நீ

நீ
பள்ளி எழுச்சி
பாடிய போது
விழித்த கண்கள்
வெறும் கண்கள் அல்ல
நெருப்பால் தண்டிக்கும்
நெற்றிக் கண்கள்

செம்மைப் புரட்சிச்
சிவப்புக்குச் சிலரிங்கே
அம்மியிலே மருதாணி
அரைக்கையிலே நீயோ
இரத்தத்தில் உன்னுடைய
எழுதுகோலைத் தோய்த்தாய்!

பெண்களைப் பாடும்
பித்தர்களின் கூட்டத்தில்
பெண்களுக் காகப்
பாடிய பெருங்கவி நீ!

பூவிழந்த கொடிக்காகப்
புலவர்கள் புலம்பையிலே
பூவிழந்த பூவையர்க்காய்ப்
போர்க்கவிதை புனைந்தவன் நீ

வானத்து மீன்பிடிக்க
வலை பின்னும் கவிஞரில்
கொசு வலையைப் பின்னிக்
கொடுத்தவன் நீயல்லவா?

முகத்தையே இழந்து
முதலற்ற எங்களுக்கு
முகவரியைத் தந்தவன் நீ!
முதலாக வந்தவன் நீ!

கவிஞர் அப்துல் ரகுமான்

# புரட்சிப்பாவலரின் புதிய பார்வை

புலவர்
சா. மருதவாணன்

புரட்சிப்பாவலர் பாரதிதாசன் பிறபாவலர்களைப் போன்றவரல்லர். அவருடைய பார்வையே புதுமையானது - புரட்சி வாய்ந்தது. இலக்கியக் கலையைக் காலத்தின் கண்ணாடி என்பர் அறிஞர். அக்கலையைக் காலத்தின் கண்ணாடி ஆக்கிக் காட்டுவதிலே வல்லமை படைத்தவர்- கண்ணாடியாக்கிக் காட்டுவதோடு அவர் நிற்பதில்லை- புதிய காலத்தையே- மறுமலர்ச்சிக் காலத்தையே புதிதாகப் படைத்துக் காட்டுகின்றார். மறுமலர்ச்சியைப் படைப்பதோடு, நம்மையே அக்காலத்தில் நடமாட வைக்கின்றார்- காலத்திற்கேற்ற கருத்தாளராக்கிக் காட்டுகின்றார்.

புரட்சிப்பாவலரின் புதிய பார்வைகளைக் கண்டு மகிழ்வோம்! பாவேந்தர் பார்வையோ புதுமையாக உள்ளது. பிறர் காணும் கடலையும் கடற்கரையையும் புரட்சிப் பாவலர் காணுகின்றார்- கடல் அலைகளைப் பார்க்கின்றார்- கற்பனை பிறக்கின்றது. கடலோர மணற் பரப்பைக் காணுகின்ற பொழுது, மணலின் பழுப்பு நிற வெண்மையும் கருமையும் கலந்த தோற்றம் கீரிப் பிள்ளையின் உடல் வண்ணத்தைப் போன்று இருப்பதை உன்னுகின்றார்- மணல் குவியல் குவியலாக மிகுந்து கிடக்கின்ற காட்சி மணல் மெத்தையாகப் புரட்சிப் பாவலருக்குத் தோன்றுகின்றது. அந்த மணல் மெத்தை மேல் அலைகள் வந்து மோதுகின்றன- சில அலைகள் மணல் மெத்தை மேல் வீழ்ந்து நனைக்கின்றன- சில அலைகள் கீழே வீழ்கின்றன- இந்த இனிய இயற்கைக் காட்சி, கல்விநிலையங்களில் பயிலுகின்ற இளைஞர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் மேல் எழுந்து ஆடிக் குதிப்பதையும் கீழே விழுந்து புரள்வதையும் நினைவிற்குக் கொண்டு வருகின்றது. புதிய பார்வையில் பாடல் பிறக்கின்றது.

''ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல் வண்ணம்போல்
மணல் மெத்தை அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி''

கடல் அலைகள் மணல் மெத்தை மேல் ஏறிவீழ்வதற்குக் கல்விநிலைய மாணாக்கரை உவமையாகப் பாடியிருப்பது படித்து மகிழத்தக்கது. கல்விநிலையங்களில் மகிழ்ச்சிப் பெருக்கால் இளைஞர்கள் துள்ளிக் குதிப்பதையும் தரையில் விழுந்து புரள்வதையும் எண்ணிப்பாருங்கள். அப்பொழுதுதான் அந்த உவமையின் பொருத்தம் நனி விளங்கும்.

அடுத்து, வானம் வழங்கும் வண்ணக் காட்சியை எல்லாரும் கண்டு இன்புறுகின்றோம். ஒளி வீசித்திகழும் விண்மீன்களைப் பார்க்கின்றோம்- வியப்படைகின்றோம்- விண்மீன்கள் வழங்கும் வியத்தகு ஒளிக்காட்சியில் மூழ்கித் திளைக்கின்றோம்- சிரித்து மகிழ்கின்றோம். புரட்சிப் பாவலர் விண்மீன்கள் நிறைந்த விரிந்த வானத்தைக் காணுகின்றார்- கூர்ந்து நோக்குகின்றார்- அவருடைய பார்வையில் அவை விண்மீன்களாகத் தெரியவில்லை- வானப்பாவையின் உடலில் ஏற்பட்ட புண்களாகவே தோன்றுகின்றன. எவ்வாறு? இந்த மண்ணில் பாட்டாளிகள் பகல் முழுவதும் கடுமையாக உழைக்கின்றார்கள்.

ஆனால், அவர்கள் உண்பதற்குரிய உணவோ- உடுப்பதற்குரிய ஆடைகளோ- உறைவதற்குரிய இல்லங்களோ இல்லாமல் வறுமையில் உழலுகின்றார்கள்- ஏழ்மையில் புரளுகின்றார்கள்- துயர்க்கடலில் மிதக்கின்றார்கள். தங்கள் உடைமையாளரிடம்- பண்ணையாரிடம்- ஆலை அரசர்களிடம்- தொழிலதிபர்களிடம், உழைத்து உருக்குலைந்து போன- செல்வம் சேர்வதற்குக் காரணமாயிருந்த-பாடுபட்ட பாட்டாளி பணிவாகச் சென்று, உரிய பங்கைக் கேட்டால், செல்வர்கள்- பண்ணை உரிமையாளர்கள்- ஆலை அரசர்கள்- முதலாளிகள் ஈவு இரக்கம் இல்லாமல்- கடமை உணர்வு இல்லாமல் பொறுப்பில்லாமல் சீறிப்பாய்கின்றார்கள்- புலியாக உறுமுகின்றார்கள்- வசைமாரி பொழிகின்றார்கள்- இழிமொழிகளால் குளிப்பாட்டுகின்றார்கள்- வெளியில் அடித்து விரட்டுகின்றார்கள்- வேதனையைச் சுமக்கச் செய்கின்றார்கள். இக்கொடிய காட்சியை வானம் என்ற மங்கை நல்லாள் பகல் முழுவதும் பல்வேறிடங்களில் காணுகின்றாள்- வயிறு எரிகின்றாள்- உடல் பதைக்கின்றாள்- வெகுளியடைகின்றாள். இதன் ஏதுவால் உடல், மிகுந்த வெப்பமடைகின்றது- வெப்பமிகுதியால் அவள் உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு விட்டன. இவ்வாறு ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்களாய்க் காட்சியளிக்கின்றன என்று கற்பனை நயத்தோடு கன்னித் தமிழால் பாடுகின்றார்.

''மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத்தன்
கண்மீதில் பகலிலெல் லாம்
கண்டுகண் டந்திக்குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி''

விரிவானம் வழங்கிய ஒளிக்காட்சி, புரட்சிப் பாவலருக்கு வியப்பாக இல்லை - எழிலாக இல்லை- மகிழ்ச்சியாக இல்லை- வேதனையாக உள்ளது. இதனால் நாம் அறிவதென்ன? பாட்டாளி மக்கள் மீது- உழைப்பாளிகள் மீது - பாவலரின் பரிவு எந்நிலையில் இருந்ததென்பதை உணர்கின்றோம். புரட்சிப் பாவலர் வழங்கிய அறிவுரையைக் கேட்ட நாம், உயர்வு தாழ்வுகளைப் படைத்துக் கொண்டு பேதைமைக்கு இடமளிக்கக் கூடாது. தமிழர்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்ற உண்மையைப் பரப்பவேண்டும். சால்பினை வளர்த்துச் சான்றோர்களாய் மிளிர வேண்டும்.



## உலக ஒற்றுமை

தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.

TNPSC

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 1.11.89 மற்றும் 2.11.89 அன்று, தமிழ்நாடு பொதுப்பணித் துறையில் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணியில் இளநிலைப் பொறியாளர் (கம்மியல்) (Junior Engineer Mechanical) பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) முடிவின் அடிப்படையில், தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்ப தாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | 5 | 16 | 23 | 25 |
| 41 | 54 | 56 | 58 | 65 |

DIPR/827/MS/90/MCS

TNPSC

**விளம்பர எண்: 12/90**

தமிழ்நாடு மாநில கருவூல மற்றும் கணக்குகள் பணியில் மூன்றாம் நிலை பதவிகளில் (Class-III posts i.e. Accounts Officer etc.) இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய **ஆதிதிராவிடர்/ பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும் 21.5.1990 அன்று, மாலை 5.45 மணி** வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.

(இந்த இரண்டு காலியிடங்களும் முன் தெரிவில் நிரப்பப்படாத காலியிடங்களாகும். ஆதி திராவிடர்/பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த காலி இடங்களை நிரப்ப இது இரண்டாவது முயற்சியாகும்).

**வயது:** வயது வரம்பு இல்லை.

**QUALIFICATION:**

A pass in the final examination conducted by the Institute of Chartered Accountants/Cost Accountants.

ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை" களில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி இலவசமாகப்பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும். அத்துடன் சுயவிலாசம் எழுதிய உறையும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR.932/MS/90/ad.bureau/3306



# புயல்வேகக் கவிஞர்

தத்துவக் கவிஞர்
குடியரசு

பூக்களுக்கும் மலைகளுக்கும், அருவி ஓடை
புகுந்தோடும் சமதளத்துப் புல்வெ ளிக்கும்-
ஈக்களுக்கும், முகில்மிதக்கும் வானத் திற்கும்-
ஈரநிலா வருகைக்கு முன்சி வந்து

படர்ந்திருக்கும் அந்திக்கும்- கூடு நோக்கிப்
பறந்துவரும் பறவைக்கும்- வான வில்லின்
சுடருக்கும்- சலனமற்ற நீர்நி லைக்கும்-
பாட்டெழுதிக் கொண்டிருந்தார் பாவ லர்கள்!

வருவித்துக் கொண்டமனத் துன்பத் திற்கு
மருந்தாக்கிக் கொண்டார்கள் கவிதை தன்னை-
திருப்புமுனை இப்படியும் காண்ப துண்டு!
திருந்தாத தமிழருக்குச் சீர்தி ருத்த

விருந்தொன்றைப் பாவேந்தன் படைத்தான்- அன்னோன்
வேகத்தில் புயல்வேகம் தோற்ற துண்டு!
அரும்புகளை புலிப்பல்லாய் மாற்றி, மான
அணிவகுப்பில் பூச்சரத்தை நிறுத்தி வைத்தான்!

இயற்கையினைத் தமிழுணர்வுக் கேற்ற வண்ணம்
இயக்கியவன்! நாற்றுகளை ஈட்டி யாக்க
முயற்சித்தான்- தமிழியக்கக் காத லாலே
முட்டைக்குள் புலிக்குஞ்சைப் பொரித்தான் என்றால்,

செயற்கையான சொல்லடுக்கா அவனின் பாடல்?
செல்லரித்து, பழமையிலே உளுத்துக் கொட்டி
இயங்காமல் போய்விட்ட தமிழி னத்தை-
எழுப்புதற்குக் கூவிவந்த கவிதைச் சேவல்!

பெரியாரின் கொள்கைக்குள் இருக்கும் சூட்டைப்
பெயர்த்தெடுத்து அப்படியே கவிதை ஆக்கிச்
சரியான நேரத்தில் படைத்தான்! சாதிச்
சக்கரத்தில் நசுங்கிவந்த தமிழ ரெல்லாம்

காலத்தால் தப்பித்தார்! மொழிக்கு வந்த
கைவிலங்கை முறித்தார்கள்! எதிலும் எங்கும்
கோலஞ்செய் தமிழ்மகளைப் போற்றி னார்கள்
கோலோச்ச அரியணைமேல் ஏற்றி னார்கள்.

வடமொழியின் ஆதிக்கம் மேலும் இங்கே
வட்டமிடும் வழக்கத்தைப் பாட்டால் தீய்த்தான்
படமெடுக்கும் சாதிமத அரவம் காட்டும்
பற்களெல்லாம் உதிரும்வண்ணம் சொற்கள் செய்தான்

நடமாட தமிழிசையை, செவியை நோக்கி
நகர்ந்துவர வழிவகுத்தான்! தமிழ்மொ ழிக்குத்
திடமான படைப்புகளை அணிசெய் வித்தான்
தித்திப்பே தமிழென்றான்! வீரம் வாழும்

உள்ளத்தை மட்டுந்தான் உள்ளம் என்றான்-
உழைப்பின்றி உலகில்லை- சுரண்டு வோரின்
கள்ளத்தைத் தான்கொன்றான்! விதவை வாழ,
கதவுகளைத் திறவென்றான்! காத லென்ற

வெள்ளத்தை அணை கட்டித் தடுப்போர் தம்மை
வெறுத்தொதுக்க வேண்டுமென்றான்- இந்நூற் றாண்டின்
கொள்ளையின்பம் பாவேந்தன்! அவனின் பாட்டைக்
குடிக்கின்ற தேனீயும் தமிழ்தான் பாடும்



# மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்க!

ஒன்றென்றாய்; உளத்தாலே ஒன்றி விட்டோம்;
ஓரினமே தமிழரெனும் விதையை நட்டோம்!
என்றென்றாய்; இமயம்போல் உயர்தல் என்றாய்;
ஏற்றத்தால் எழில்வானே சிலிர்க்கக் கண்டோம்!
நன்றென்றாய்; புத்துலகம் காண்பாய் என்றாய்;
நாடென்ன, மொழியென்ன, துறைகள் தோறும்
நின்றொளிரப் புதுமைபல நிலவச் செய்தோம்!
நிலவென்ன, சூரியனும் வீட்டுத் தோட்டம்!

போரில்லா உலகம்நீ வேண்டும் என்றாய்;
பூஉதிர்ந்தால் காற்றுக்கும் பொறுப்புண் டென்னும்
நேரில்லா வகையினிலே அமைதி யுண்டு;
நெஞ்சென்றால் கருணையுள நிலையே உண்டு!
சீரெல்லாம் பொங்குவதால் பஞ்சந் தன்னைச்
செயற்கையிலும் படைப்பதற்கு வாய்ப்பே இல்லை!
பாரெல்லாம் பொதுவுடைமை ஆன தாலே
பசி, வறுமை என்றால், யார் என்பார் மக்கள்!

ஆதிக்க மொழியில்லை; அதனால் எங்கும்
அடிமையெனும் சொல்பற்றி அறிவார் இல்லை!
போதிக்கும் நீதியெனல் இல்லை; குற்றம்
புரிபவராய்ச் சொல்வதற்கோர் ஆளே இல்லை!
வாதிக்கும் கருத்தில்லை; விஞ்ஞா னத்தின்
வளர்ச்சிக்கே அதுஎல்லை! ஆண்.பெண் என்று
சோதிக்கும் கருவிக்கே வேலை இல்லை:
சொல்லன்றி வேற்றுமை,வே றெதிலும் இல்லை!

இப்படியெல் லாம்,நெஞ்சில் உன்னை எண்ணி
எழுச்சியுடன் பாடுதற்கோர் ஆவல் என்றால்
எப்படியப் பா,முடியும் என்பார்! உள்ளம்
எரிமலைபோல் ஆகிறது, உன்நூற் றாண்டைத்
தப்படிவைத் தாடுதல்போல் கொண்டா டற்குத்
தமிழ்நெஞ்சம் மறுக்கிறது! கொள்கை தன்னை
ஒப்படைத்தாய் எம்மிடத்தே; கவிதை வேந்தே!
உருப்படியாய் ஆக்கும்நாள் உன்நூற் றாண்டே!

கவிதைக்கும் தமிழுக்கும் மூச்சே யாகக்
கனலுக்கும் புனலுக்கும் விளக்க மாகப்
புவியினிலே புரட்சியினைப் படைப்பாய்த் தந்த
புலமைக்குத் தெளிவுரையே! உன்றன் நெஞ்சத்
தவிப்பெல்லாம் காட்சியெனச் செய்யும் காலம்
தரைமூடிப் போவதற்கு விடவே மாட்டோம்!
நவயுகத்தைப் படைத்திடுவோம்; உன்நூற் றாண்டை
நானிலமே கொண்டாடும் நாளைக் காண்போம்!

இனநலத்தின் வேரினிலே நீரைப் பாய்ச்சி
இந்தியத்தை வளர்ப்போமேல், உலகம் என்னும்
கனிகுலுங்கச் செய்திடலாம்; உயிர்கள் எல்லாம்
காலத்தின் படைப்பாகும்; சமமும் ஆகும்
எனும்நோக்கம் ஞாலத்தின் வேத மாகும்!
எழுச்சிவிதை இட்டவனே, அக்கா லத்தே
மனிதமெனும் உணர்வோடே உன்நூற் றாண்டு
மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்ந்தே ஓங்கும்!



கவிஞர் அரிமதி தென்னகன்



# தமிழுள்ளம் தாயுள்ளம்

## கவிஞர் மன்னர்மன்னன்

புதுவை பெருமாள் கோயில் தெரு, எண்பத்தெட்டாம் எண் வீட்டில் குடியிருக்கிறார் தமிழாசிரியர் கனக-சுப்புரத்தினம். மேற்கே கோட்டை மேடு பகுதியில் பசிய வயல்கள். அடுத்து தென்னந்தோப்பு. அருகிருக்கும் இலாசுப்பேட்டை மடுக்களிலிருந்து வழியும் நீர் இங்குதான் பாயும்.

புயலும் பெருமழையுமாய் வெள்ளம் பெருக்கெடுக்கிறது. வெள்ளநீர் பெருக்கெடுத்துப் பெருமாள்கோயில் தெருவுக்கும் வந்துவிட்டது.

காடெல்லாம் விறகான கதைதான்!

வீட்டில் அரிசி-பருப்பு எதுவுமில்லை. ரேஷன் கடை திறக்கப்படவில்லை.

கனக-சுப்புரத்தினம் ஊரைப் பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறாரேதவிர குடும்பத்தைப் பற்றி எண்ணியதாகத் தெரியவில்லை.

அவரின் கவிதைக்குக் கருப்பொருள் கிடைத்து விட்டதே! சொல்லவா வேண்டும்!

குயில் சிவா வந்தார்; வீட்டின் நிலவரம் எப்படி, குழந்தைகள் சாப்பிட்டார்களா என்பதைத் தம் விழியாலே கண்டுகொண்டார். சிறிது நேரத்தில், புயலால் மலிவாகிப் போன சில தேங்காய்களும், மழை நீரில் நிலம் விட்டு மேல் எழும்பி விட்ட வள்ளிக்கிழங்கும் வந்து சேர்ந்தன.

சிவா தாத்தா ஏற்பாடுதான்!

வள்ளிக்கிழங்கை அவித்து, உதிர்த்துத் தேங்காய்த் துருவலைச் சேர்த்து எங்கட்கு அளித்தார் அன்னையார்.

அப்போது ஒரு கூக்குரல்:

''வாத்தியாரே, பாருங்க எங்க குடிசையும் போச்சி, எங்க ஊட்டுக்காரை பாம்பு கடிச்சிட்டுது. புள்ளைங்க சாப்புட்டு நாலு நாளாச்சி!''

கருத்தூன்றி எழுதிக் கொண்டிருந்த கனக-சுப்புரத்தினத்தின் காதில் இந்தக் குரல் பாய்ந்தது.

எழுதுகோலை எடுத்துவைத்துவிட்டு எழுந்தோடினார்.

''இப்ப என்ன செய்றது?—பழநி'ம்மா, இந்த பசங்க திங்கிறதுக்கு ஏதாச்சும் குடு!''

இவரின் கட்டளை மீது முறையிட வேறு முறையீட்டு நீதிமன்றம் கிடையாது.

குடிசை வீட்டுச் குழந்தைகள் வரிசையாக அமர்ந்து வள்ளிக்கிழங்கோடு தேங்காய்த் துருவலையும் உண்டனர்.

இதற்குள் வாத்தியார் வெளியில் போய்விட்டார்.

பக்கத்துத் தெருவில் இருந்த இவரின் சீடர் கம்பவுண்டர் பார்த்தசாரதியுடன் புறப்பட்டுச் சென்று பாம்புக்கடிபட்ட குடிசை ஆசாமிக்கு மருத்துவம் பார்க்கச் செய்திருக்கிறார்.

குயில் சிவாவுக்கு ஒரு பக்கம் ஆத்திரம். மற்றொரு பக்கம் ஆச்சரியம்.

குடும்பத்தினரின் பசியைப் பற்றிக் கவலைப்படாத சுப்புரத்தினம் பரபரப்பாய் ஓடி எவருக்கெல்லாமோ உதவி செய்கிறாரே!

கனக-சுப்புரத்தினம் இதற்கு விளக்கமளித்தார்: ''என் குடும்பத்தைப் பார்த்துக்க உன்னைப்போல யாராச்சும் இருக்கிறீங்க. ஏழை எளியவங்களுக்கு யார் உதவி செய்யப் போறாங்க?

சுப்புரத்தினம் - இவர் புலவரா, புரவலரா?

இனிமைத் தமிழ், தொன்மைத் தமிழ், தென்றமிழ் என்றெல்லாம் பாடிவிட்டுப் போக வேண்டியது தானே!

இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்

என்று கன்னல் தமிழில் பாடிவிட்டு இவரும் துயின்றிருக்க வேண்டியது தானே!

தமிழுள்ளம், தமிழைப் போற்றுகிற உள்ளம், தமிழரை ஒன்றுபடுத்துகிற உள்ளம், தமிழரின் நலிவு தீர்க்கும் உள்ளம் என்று பொருள்கண்டார் பாவேந்தர்.

தமிழுள்ளம் என்பது ஒற்றைச் சாண் உயரமல்ல. அது உலகளா வியது!

சின்னதொரு கடுகுபோன்ற உள்ளம், கடுகுக்கு நேர் மூத்த துவரை யுள்ளம், தொன்னையுள்ளம், மாம்பிஞ்சியுள்ளம் ஆகியவற்றை வரிசைப்படுத்தி வரம்பு கட்டியவர்,

தொல்லுக மக்களெலாம்
'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்,
ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான்
தீர்ந்ததாலே!

என்று உலக சமுதாய அமைப்புக்கு வழிகாட்டுவார்.

அன்னையின் ஆற்றலைத் தமது குடும்பவிளக்கில் அழகுறச் சித்தரிப் பார்:

''மலர்க்கண்ணி தனில் அவிழ்ந்த
மலரிதழ் ஒன்றைத் தூக்கம்
கலைத்திடக்குழந்தை மீது
போட்டனன்''—

கணவன் வேடப்பன் வீசிய அந்த மலரிதழ் என்ன ஆயிற்று?

தாயின் கைதான்
மலரிதழ் தனைத் துடைத்து
மற்றும் தன் இடம் போயிற்று!

தாய்மையின் ஆற்றலும் பொறுப்பு உணர்ச்சியும் இந்த உலகிலே வேறு எவர்க்குண்டு?

தன்னலம் தாய்க்கில்லை. அந்தத் தாயுள்ளம் வாய்க்கப் பெறும்போது தன்னலம் மாய்ந்து போகும்.

அப்படி ஒரு தாயுள்ளம் தான் தமிழுள்ளமாய்த் திகழ முடியும்.

வேலையில்லை தந்தைக்கு!
வெள்ளை நூல் அன்னையிடம்
பாலில்லை பச்சைக்குழந்தைக்கே!—
தாலி விற்றால்
வாங்குவாரில்லை; அங்கு வாட்டும்
பசி நீக்கித்
தாங்குவார் தாம் தவம் செய்வார்,

என்பார் மணிமேகலை வெண்பாவில்!

மேலும்,

சோறில்லை என்பார்க்குச் சோறு
தருவதுதான்
கூற்றங்களின் சாற்றுக்
கூட்டம்மா—வேறேதான்
எங்குண்டம்மா பசிக்கே ஈரம்



பாவேந்தர் குடும்பத்தவர்

பழஞ்சோறிட்டு வக்கும்
அங்குண்டம்மா நல்லறம்.

இப்படி ஏழையர்க்குச் சோறிடும் அறத்தைப் பேணு'வார் தாயுள்ளம் படைத்த ஈர நெஞ்சினர் என்கிற பாவேந்தர்.

தன்னலங்கள் தீர்ந்ததாலே தடைச்சுவர்கள் மாயும். எல்லாரும் ஒன்றே என்ற எண்ணம் தோயும்.

இக்காலத்தில் நம் கண்முன்னே தோன்றும் கலகங்கள், நாசங்கள் எதனைக்காட்டுகின்றன? தன்னலச் சுவர்கள் எழும்பியிருப்பதையும் தாயுள்ளம் குன்றிப்போனதையும் அன்றோ காண்கிறோம்!

1960-இல் பாவேந்தர் இதற்கு 'ஐந்தொழுக்கம்' ஒன்றினை வகுத்தார்.

1. ஓர் இனம் மற்றோர் இனத்தை மாய்க்கலாகாது.
2. ஒரு மொழி மற்றொரு மொழியை மாய்க்கலாகாது.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பற்றிச் சுரண்டும் பான்மை கட்டோடு ஒழிதல் வேண்டும்.
4. உள்நாட்டின் அமைதியைக் காக்கும் அளவுக்கு மேல் பெரும்படை, விலையேறப் பெற்ற அழிப்புக் கருவிகளை எந்த நாடும் வைத்திருக்கக் கூடாது. உண்டாக்கக் கூடாது.
5. அங்கங்குள்ள சான்றோரைக் கொண்ட ஓர் உலகப் பெருமன்றம் மேற்சொன்ன நான்கு திட்டங்களைச் சிதறாமல் மேற்பார்வை பார்த்து வர வேண்டும்.

ஒன்று பட்ட நாடுகளின் அவை ஒன்று இருக்கிறதாம். உலகை அது அறநெறியில் செலுத்துகிறதாம். எங்கே செலுத்துகிறது? சின்ன நாட்டுக்கு மேலும் இன்னல் தேடுவதில் மும்முரப்படுகின்றது.

ஐந்தொழுக்கம் வகுத்த அந்தத் தமிழுள்ளம்தான், அதற்கும் முப்ப தாண்டுக்கு முன்பே,

உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து
மேலே ஏறு!

என்று மானுட சமுத்திரத்தைப் பார்த்துக் கூவினார்.

தம் அளவில் தமிழுள்ளம், தாயுள்ளம் என்பதை வாழ்ந்து காட்டினார். அந்த வழியில் தமிழர்களை ஒன்று கூட்டினார். வேற்றுமைகளை ஓட்டினார். ஒன்றே அனைவரும் என்பதை நிலை நாட்டினார். அதனாலன்றோ,

தமது ஆத்திசூடியின் முதல் வரியாக ''அனைவரும் உறவினர்'' என்று தீட்டினார்!

# பாவேந்தரோடு



பாவேந்த ரோடென்றும் அருகிருக்கும் பேற்றைப்
பல்லாண்டு பெற்றவன்நான், பலநூலைக் கற்றேன்;
பூவேந்து செந்தேனின் புதுச்சுவையை ஒக்கும்
புரட்சிமிகு பாடலெல்லாம் அவர்பாடக் கேட்டேன்;
மாவேந்து பழச்சாறே அவர்யாத்த பாடல்!
மறுமலர்ச்சி மனமலர்ச்சி மொழிமலர்ச்சி கூட்டும்!
காவேந்து பேரெழிலாம் கவியரசர் உள்ளம்
கனிந்துவந்த கவிதையெலாம் எனைஊக்கக் கண்டேன்.

இளவயதில் அவரிடத்தில் நான்பயின்று வந்தேன்;
இனியமுகம் பாடத்தை எடுத்தியம்பும் ஆற்றல்
வளமுடையார்; வகையுடையார்; அவரிடத்தில் கற்றோர்
மாத்தமிழின் வளமுடையார்; பற்றுடையார்; அஞ்சா
உளமுடையார்; செயலுடையார், உயர்நோக்க முடையார்;
ஒண்டமிழன் முன்னேற்ற நோக்குடையார் ஆவர்!
களமுடையார் எதிர்க்கின்றார் போர்மறவன் என்றன்
கவியரசர் பகைகண்டு கலங்கியதே இல்லை.

பாப்புனையும் நற்றொழிலை அவரிடத்தில் கற்றேன்;
படித்துணரும் நற்செயலை அவரிடத்தில் கண்டேன்
யாப்பணியைத் தொன்னூலை அவர்விளக்கக் கேட்டேன்;
யாரினிமேல் அவர்போல எனையூக்க வல்லார்
காப்பணியாய் எனக்கிருந்தார்; நற்கவிதை யாக்கும்
கலைச்செறிவை நனிவிளக்கி எனைஎழுதச் செய்தார்;
பாப்பாவின் இனமெல்லாம் பாடுகின்ற ஆன்ற
பரம்பரையை, நற்கவிஞர் பாசறையைக் கண்டார்.

காடெடுத்த பல்லவர்கள் நற்றொண்டை நாட்டின்
கடல்புரளும் சீர்ப்புதுவை பெற்றெடுத்த செம்மல்
ஏடெடுத்தால் பாப்பிறக்கும், இனியதமிழ் பிறக்கும்;
எவரிடத்தும் பேச்செடுத்தால் இருபொருளும் பிறக்கும்;
மாடெடுத்து நகைசெய்வோர் மலைக்கின்ற வண்ணம்
வகைவகையாய்த் தமிழ்முத்து மணிமாலை யாக்கிப்
பீடெடுத்த தமிழ்த்தாயின் முடிசூட்டிச் சென்ற
பெரும்புலவர் பாவேந்தர் எனதாசான் வாழ்க!

பன்னூறு திருமணத்தில் அவைத்தலைமை ஏற்பார்;
படர்ந்துவரு நிழல்போல அவரோடு செல்வேன்
தொன்னூலின் பொருள்விளக்கிச் சுவைவிளக்கி இல்லம்
தொடங்குகின்ற மணமக்கள் நல்வாழ்விற் காண
பொன்னூறு தீந்தமிழால் புதுக்கருத்தைச் சொல்வார்
புதுக்கிள்ளை போல்நானும் இரண்டொன்று சொல்வேன்
மன்னூறு விருந்தினிலும் அருகமர்த்திக் கொண்டு
வயிறார உண்ணென்று வாயாரச் சொல்வார்.

பலாமொய்க்கும் ஈப்போல அவரிருக்க வந்து
பல்லோர்கள் சூழ்ந்திடுவர் ; நீண்டகடல் ஓர
நிலாச்சோற்றை உண்பதுபோல் அவர்வாயின் பேச்சை
நெடுநேரம் கேட்டிருப்பர் ; சிரித்துமகிழ்ந் திருப்பர்;
புலாலுணவே அவர்விருப்பம்; அவரோடே சோ்ந்து
புசித்தின்பம் கண்டதினால் புல்லுணவை மறுத்தேன்
உலாவுவார் கடலோரம் அதிகாலை, மாலை;
ஒப்பிலாக் கனகசுப்புக் கவியரசர் வாழ்க!

கானெழுந்த மலைக்காட்டு நீரருவி! நன்கு
கனிந்திருக்கும் குண்டுபலா! மாவாழை! உச்சித்
தேனெழுந்த செஞ்சொல்லார், பூக்காட்டுத் தும்பி!
செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த சீர்த்திமிகு செல்வர்,
வானெழுந்த ஞாயிறவர்! அவரொளியைப் பெற்று
மறிகடல்சூழ் உலகத்தில் தொடுவானில் தோன்றும்
கூனெழுந்த நிலவுநான்! எனதாசான் நீண்ட
குமரிமுனைத் தமிழ்க்கடலே; கடலோரம் நானே!

— கவிஞர் வாணிதாசன்

—'பாவேந்தர் பாரதிதாசன் பெருமை' என்னும் நூலிலிருந்து

TNPSC

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## திருத்த அறிக்கை

1.9.1989 நாளிட்ட தமிழரசு பத்திரிக்கையில் பக்கம் 19-32-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளுக்கு கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

### திருத்தங்கள்

1. இணைப்பில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் பட்டியலில், வரிசை எண் 171-ல் உள்ள இனத்திற்குப்பதிலாக கீழ்க்கண்டவாறு படிக்கவும்:-

171. பரவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் தவிர - அங்கு இவ்வகுப்பினர் ஆதி திராவிடர் களாக அழைக்கப்படுகின்றனர்). (கிருத்துவமதம் மாறியவர்கள் உட்பட)

2. பத்தி 14 (ஐ)-விற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு படிக்கவும்:-

காலியிடங்கள் உள்ள ஒரு பதவிக்கு அனுபவம் ஏதேனும் கேட்கப்பட்டிருந்து பதவியில் உள்ள காலியிடங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இன ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் மேற்படி அனுபவம் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விண்ணபதாரர்களும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட விதி அரசினால் அவர்களுக்கு சாதகமாக தளர்த்தப்படலாம் என்று நிபந்தனைக்குட்பட்டு விண்ணப்பிக்கலாம். அதுபோன்ற அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்கு முழுமையான தகுதிகள் பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு விண்ணப்பதாரர்கள் கிடைக்காவிட்டால் மட்டுமே கவனிக்கப்படும். இந்நோக்கத்திற்காக முழுமையான தகுதி பெற்ற ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் வாய்மொழித் தேர்விற்கு முதலில் அழைக்கப் படுவார்கள். அவர்கள் தெரிவு பெறாத பட்சத்தில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட அனுபவம் பெற்றிராத ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்ப தாரர்கள் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

நாள்:1.2.1990

செயலாளர்.



# படமும் செய்தியும்

மாண்புமிகு இந்தியத் தலைமை நீதிபதி திரு. சபயாஜி முகர்ஜி அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் நினைவுப் பரிசினை வழங்கினார். (16.4.90)

திருவள்ளுவர் திருவுருவப் படத்தினை வரைந்த ஓவியர் திரு. வேணு கோபால் சர்மா அவர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 3 இலட்சத்திற்கான காசோலையைத் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (6.4.90)





தமிழக அரசின் தமிழ்ப்புத்தாண்டு நாள் இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் சென்னை அரும்பாக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர். க. அன்பழகன் அவர்கள் இலவச அரிசி வழங்கினார். (11.4.90)

சென்னை கிண்டியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி துணைக் கட்டிடத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர், எம்.எல்.ஏ., மாநகராட்சி ஆணையர் திரு. மு. அபுல்ஹசன் ஆகியோர் உடன் உள்ளனர்.





# சின்ன வயதினிலே

வெளியூரிலிருந்து வந்த பெரியம்மா வாழைப்பழங்களைக் கொண்டு வந்திருந்தாள். வீட்டிலுள்ள பெரிய பையன், சின்னப்பையன் இருவரிடமும் ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து விட்டு, மீதிப் பழங்களை அறைக்குள் கொண்டு சென்று வைத்துவிட்டு வந்தாள். பெரிய பையனிடம் ''அறைக்குள் இருக்கும் பழங்களெல்லாம் உனக்குத்தான். அப்புறமாக யாருக்கும் தெரியாமல் எடுத்துத் தின்றுவிடு'' என்று சைகை மூலம் அறிவித்தாள். ஆனால் பாவம், அந்தப் பையனுக்கு அவளது சைகையின் அர்த்தம் தெரியவில்லை. அவனுக்குத்தான் தெரியவில்லையே தவிர, அங்கே நின்ற சின்னப் பையனுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது!

உடனே, அவன் யாரும் பார்க்காதபடி மெதுவாக அறைக்குள்ளே புகுந்தான். அங்கே இருந்த அத்தனை பழங்களையும் தின்று தீர்த்தான். கடைசியில் பழங்கள் இருந்த இடத்தில் தோல்களை வைத்துவிட்டு மெதுவாக வெளியில் வந்துவிட்டான்.

சிறிதுநேரம் சென்றது. பெரியம்மா மூத்த பிள்ளையை அழைத்து, ''தம்பி அறைக்குள்ளே இருக்கிற பழங்களை எடுத்துக்கொள்ளச் சொன்னேனே, இன்னும் எடுத்துக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டாள்.

''இல்லையே!'' என்றான் அவன். ''சரி, உடனே போய் எடுத்துக்கொள். தம்பிக்குத் தெரிந்தால் விடமாட்டான்'' என்றாள் பெரியம்மா.

உடனே அவன் ஆவலாக அறைக்குள் ஓடினான். வாழைப்பழங்கள் இருந்த இடத்தை நெருங்கினான். தோல்களைக் கண்டதும் திடுக்கிட்டான். உடனே பெரியம்மாவிடம் திரும்பி வந்து கலக்கத்துடன் விஷயத்தைக் கூறினான். பெரியம்மா உடனே சின்னவனைக் கூப்பிட்டுக் கேட்டாள். ''ஆம், நான் தான் செய்தேன்'' என்று அவன் துடுக்காகப் பதில் சொன்னான். பெரியம்மா கோபம் கொண்டாள். வாயில் வந்தபடி திட்டினாள்.

இந்தச் செய்தி அப்பாவுக்கு எட்டியது. உடனே சின்னவன்; நடந்ததை நடந்தபடி ஒரு காகிதத்திலே எழுதி அப்பாவிடம் கொடுத்தான். எப்படி எழுதிக் கொடுத்தான்? வசனத்திலா? இல்லை; பாட்டிலேயே எழுதிக் கொடுத்தான்! அப்பா அந்த அழகான பாட்டைப் படித்ததும், மிகவும் வியப்படைந்தார்.

அந்தப் பாடல் பின்வருமாறு:

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத் தேடி பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்க வேண்டும்
கெடு நினைப்பே அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச் சீப்பில்
ஒன்று விழுக்காடு தந்தாள்;
விழுங்கிட்வே அண்ணாவுக்கு
மீத்துக் கொடுக்க மறைப்பதென்ன?

பதின்மூன்று வயதில் இப்படி ஓர் அருமையான கவிதையை எழுதிய அந்தச் சிறுவன்தான் பின்னர் மாபெரும் கவிஞராக மாறினான். சுப்புரத்தினம் என்னும் பெயர் கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் தான் அந்தக் கவிஞர்.

ஆதாரம்:
குழந்தைக்கவிஞர்
அழ. வள்ளியப்பா எழுதிய
'சின்னஞ்சிறு வயதில்' - முல்லை
முத்தையா தொகுத்த 'அறுசுவை
விருந்து'






# ஓவியங்களில் பாவேந்தர்





# பாரதிதாசன் பண்பாடு

மொழிஞாயிறு
ஞா.தேவநேயப்பாவாணர்



நாட்டு விடுதலைக்கு நன்றாகப் பாடுவான்
ஈட்டு தமிழர்க்குள் இல்எனலை- வீட்டக்
கனகசுப்பு ரத்தினப்பேர்க் கார்முகில் தோன்றி
மினுமினுத்துப் பெய்ததுபார் மேல்.

ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையுஞ் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினு மஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்.

தெளிதேனில் தீன்கலந்த தெண்ணீர்ப் பதம்போல்
எளிதாம் இனிய எழில்கொள் - களிநடையிற்
செம்பொற் கருத்துக்கள் சேர வழங்கினான்
இம்பர்க்குப் பாரதிதா சன்.

இருபதாம் நூற்றாண் டிடையிணையே யில்லாப்
பெருமைசேர் பாரதி தாசன் - ஒருமையுடன்
வாழ்நாள் முழுதும் வளரடக்கங் கொண்டுற்றான்
வீழ்நாளில் விண்ணவனாம் வீறு.

தன்னலமுந் தன்குடும்பத் தின்னலமும் பேணாது
மன்னலமே யென்றும் மதித்தொழுகித் - தன்னினமாஞ்
செந்தமிழ் மக்கள், சிறந்தோங்கி வாழ்வதற்கே
வந்தனன் பாரதிதா சன்.

இம்மியே கூடினும் இன்றமிழை விற்றுவிடும்
தெம்மனப் போலித் திரிதமிழர் - கும்மிடையே
பாலை நிலத்திற் பழம்படு பன்மரப்பைஞ்
சோலையே பாரதிதா சன்

நண்பன் புறத்திருக்க நல்வா னமுதெனினும்
உண்ப திலையென் றுயர்தமிழப் - பண்பதனைத்
தன்னகத்தும் வேற்றகத்துந் தப்பாது கைக்கொண்ட
தென்னகத்தான் பாரதிதா சன்.

புரட்சிப்பா வேந்தனென்று போற்றும் புகழில்
முரட்சிக் கிடமின்றி முற்றி - வறட்சியால்
வாடி வருந்தினும் வண்டமிழைக் கைவிடான்
வீடினான் பாரதிதா சன்.

*('முதன்மொழி' என்னும் இதழிலிருந்து 24.4.71)*

# பாவேந்தர் வாழ்விலே..



புலவர் ந.மு. நாகராசன்

**கவிஞர் பிறந்தார்**

1891 ஏப்ரல் 29-ம் நாள் புதன்கிழமை, புதுச்சேரி கனகசபை முதலியார் - இலக்குமி அம்மையாருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம்.

**ஆரம்பக் கல்வி**

1891-ல் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயாவிடம் ஆரம்பக் கல்வி பயின்றார்.

**இலக்கண-இலக்கியம்**

1907-ல் புதுச்சேரி மகாவித்துவான் ஆ. பெரியசாமி ஐயாவிடமும் பங்காருபத்திரிடமும் இலக்கண இலக்கியங்களையும் வேதாந்த சித்தாந்த பாடங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

1906-ல் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார்.

இளமையிலேயே கவி புனையும் திறமை பெற்றார்.

**பாரதியார் அறிமுகம்**

புதுச்சேரி வேணு நாயக்கர் இல்லத்தில் 1908-ல் பாரதியாரைக் காணும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியாரின் புலமையும் எளிமையும் கவிஞரைப் பெரிதும் கவர்ந்தது.

பாரதியார் பாடச் சொல்லி கவிஞர் பாடிய முதல்பாட்டு ''எங்கெங்கு காணினும் சக்தியடா'' என்னும் பாட்டு.

**பள்ளி ஆசிரியர்**

1909-ல் அதாவது பதினெட்டாம் வயதில், காரைக்காலைச் சேர்ந்த நிரவி என்னும் ஊரில் அரசுப் பள்ளியில் ஆசிரியராக நியமனம் ஆனார்.

**புரட்சியாளர் தொடர்பு**

1910-ல் புதுச்சேரியில் தங்கி இந்தியப் புரட்சியில் ஈடுபட்ட அரவிந்தர், வ.வெ.சு. ஐயர், டாக்டர் வரதராஜுலு நாயுடு ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார்.

பாரதியார் நடத்திய 'இந்தியா' என்னும் பத்திரிகையைப் பதிப்பிக்க மறைமுகமாக ஒத்துழைத்தார்.

**புனை பெயர்கள்**

பாரதியாரிடம் தாம் கொண்ட மதிப்பின் காரணமாக 'கனக சுப்புரத்தினம்' என்னும் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். அந்தப் பெயர் பிரபலமாயிற்று.

மற்றும் புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுதுவோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ். பாரதிதாசன் ஆகிய பெயர்களில் பாடல்கள், கட்டுரைகள், தேசியப் பாடல்கள் எழுதி வரலானார்.

**சிறை வாசம்**

1919-ல் புதுவையைச் சேர்ந்த திருபுவனை என்னும் ஊர்ப்பள்ளியில் ஆசிரியராக இருக்கையில், அப்பொழுது பிரெஞ்சுக்கு எதி

ராகச் செயல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப் பட்டு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். மத்தியில் விடுதலை அடைந்தார்.

**திருமணம்**

1921-ல் புவனகிரிக்கு அடுத்த பெருமாத் தூர் பரதேசி முதலியார் மகள் பழநி அம்மாளைப் பாரதிதாசனுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

**கதர் விற்பனை**

தேசிய இயக்கம் தீவிரமாக இருந்த காலம் கதர்த் துணிகளைத் தோளில் சுமந்து தெருத் தெருவாக விற்பனை செய்தார்.

**முதல் பெண் குழந்தை**

1921-ல் கவிஞருக்கு முதல் பெண் குழந்தை பிறந்தது. அதுவே சரசுவதி.

**கதை, கவிதை, கட்டுரை**

தேச சேவகன், புதுவை கலைமகள், தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்த போதினி, சுதேசமித்திரன், தூய்ப்ளேக்ஸ் ஆகிய இதழ் களில் கவிதை, கட்டுரை, கதைகளை, கே. எஸ். பாரதிதாசன் என்ற பெயரில் எழுதினார்.

**பக்திப் பாடல்**

1926-ல் 'ஸ்ரீமயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்ற சிறு நூலை கவிஞர் இயற்றினார்.

அதைப் புதுவையிலிருந்த காசி ஈ. லட்சுமண பிரசாத் வெளியிட்டார்.

**இரண்டாவது ஆண் குழந்தை**

1928-ல் கவிஞருக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் கோபதி. பின்னர் 'மன்னர் மன்னன்' என மாற்றிக் கொண்டார்.

**காட்சிக் கூடமாகத் திகழ்ந்து வரும் பாவேந்தர் இல்லம்**



**பெரியார் தொடர்பு**

1929-ம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

பெரியார் நடத்திய 'குடியரசு', 'பகுத்தறிவு' இதழ்களில் கதை, கட்டுரை, கவிதை எழுதத் தொடங்கினார்.

**குடும்பக் கட்டுப்பாடு**

இந்தியாவிலேயே முதன் முதலில் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிப் பாடல் எழுதிய ஒரே கவிஞர் பாரதிதாசன் என்ற பாராட்டைப் பெற்றார்.

**தேசபக்திப் பாடல்கள்**

சிறுவர் சிறுமியர் தேசியகீதம், தொண்டர் வழி நடைப் பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு முதலானவை சிறு நூல்களாக வெளி யிடப் பெற்றன.

**பத்திரிகை ஆசிரியர்**

'புதுவை முரசு' என்னும் வார இதழுக்கு ஆசிரியராக இருந்து நடத்தினார்.

**மூன்றாவது பெண் குழந்தை**

1931-ல் கவிஞருக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் வசந்தா. பின்னர் வேனில் என மாற்றப் பெற்றது.

**முதல் நாடகம்**

பள்ளி ஆண்டு விழாவில், 'சிந்தாமணி' என்னும் முத்தமிழ் நாடகத்தை எழுதி இயக் கினார்.

**இசைப்பாடல்கள்**

மற்றவர்களுடைய நாடகங்களுக்கும், சுய மரியாதைக் கூட்டங்களுக்கும், பொதுவுடை மைக் கூட்டங்களுக்கும் இசைப்பாடல்கள் எழுதிக் கொடுத்தார்.

**நாத்திகர் மாநாடு**

மா.சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்ஸ் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

**நான்காவது பெண் குழந்தை**

கவிஞருக்கு நான்காவதாகப் பெண் குழந்தை பிறந்தது. பெயர் ரமணி.

**இரணியன் நாடகம்**

1934-ல் 'இரணியன் அல்லது இணை யற்ற வீரன்' என்னும் நாடகத்தை எழுதினார்.

பெரியார் தலைமையில் நாடகம் அரங் கேற்றப்பட்டது.

அந்த நாடகத்தில் குத்தூசி குருசாமி இரணியனாகவும், திருவாசகமணி பால சுப்பிரமணியம் பிரகலாதனாகவும் நடித்தார்கள்.

**கவிதா மண்டபம்**

1935-ல் ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம் கவிதை இதழ் தொடங்கப்பெற்றது. அதன் ஆசிரியர் பாரதிதாசன். இதழ் முழுதும் கவிதைகளாகவே திகழ்ந்தது.

**பாரதிதாசன் கவிதைகள்**

திருமதி. குஞ்சிதம் குருசாமி அவர்கள் ஆர்வத்தால் கவிஞரின் கவிதைகளை எல்லாம் திரட்டி, கடலூர் தி.கி. நாராணயசாமி நாயுடு அவர்களின் பொருள் உதவியால் ''பாரதிதாசன் கவிதைகள்'' என்னும் முதல் பதிப்பை, எட்டணா விலையில் வெளியிட்டனர்.

அந்தப் புத்தகத்தில் திரு. நாயுடு அவர்களுக்குச் சமர்ப்பணம் கவிதையால் கூறியுள்ளார்.

**பெரியார் பாராட்டு**

சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர் என்று பெரியாரின் பாராட்டைப் பெற்றார்.

**இந்திய விடுதலைக் கிளர்ச்சி**

இந்திய விடுதலைக் கிளர்ச்சியை மறைமுகமாக ஆதரித்து, புரட்சியாளர்களுக்கும் தேசபக்தர்களுக்கும் இயன்ற உதவிகளைச் செய்தார்.

**முத்தமிழ் மன்றம்**

செட்டி நாட்டு அன்பர்கள் கூட்டுறவுடனும், பொருள் உதவியுடனும் சாந்தோம் சாலையில் 'முத்தமிழ் மன்றம்' நிறுவினார் கவிஞர். அதில் ஆடல், பாடல், நாடகம் என முத்தமிழையும் முழங்கச் செய்தார். அது ஒரு புது முயற்சி ஆகையால், மக்களிடையே அதற்கு அப்போது ஆதரவு இல்லாமல் போயிற்று.

கவிஞர் சுரதா அந்தக் குழுவில் ஓரிரு மாதம் சேர்ந்திருந்தார்.

**முத்தையா அறிமுகம்**

முல்லை முத்தையா, கே.ஏ.செல்லப்பா, நூர்முகம்மது ஆகிய மூவரும் கவிஞரைக் காண முத்தமிழ் நிலையம் சென்றனர்.

அப்பொழுது தோழர் முத்தையா 'கமலா பிரசுராலயம்' என்னும் பதிப்பகத்தை நடத்தி, அதில் ராஜாஜி, டி.எஸ். சொக்கலிங்கம், தினமணி ஏ.ஜி. வேங்கடாச்சாரி நூல்களை வெளியிட்டிருந்தார்.



பாவேந்தர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி, எழுதுபலகை, கட்டில்.

முத்தையா ஒரு பதிப்பாளர் என்ற விவரத்தை நூர்முகம்மது கூறினார். 'அத்தகைய பதிப்பாளர்தாம் எனக்கு வேண்டும்'' என்று கூறி, 'அழகின் சிரிப்பு' கையெழுத்துப் பிரதியை முத்தையாவிடம் கொடுத்தார் கவிஞர்.

**மூத்த மகள் திருமணம்**

கவிஞரின் மூத்த மகள் சரசுவதிக்கும் கட்டிபாளையம் கண்ணப்பருக்கும் 1944-ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**செட்டி நாட்டில் கவிஞரின் முழக்கம்**

கவிஞருக்குச் செட்டி நாட்டுத் தொடர்பு அதிகரித்தது. செட்டி நாட்டு வட்டாரத்திற்குச் சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தி, இளைஞர்களிடையே புத்துணர்ச்சியையும் கவிதை ஆர்வத்தையும் உண்டாக்கினார்.

செட்டி நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போதெல்லாம் கானாடுகாத்தான், சுயமரியாதை வீரர் வை.சு.சண்முகம்-மஞ்சுளா பாயின் இல்லத்தில் தங்குவார் கவிஞர்.

**முல்லைப் பதிப்பகம்**

கவிஞர் நூல்களை வெளியிடுவதற்கென முல்லை முத்தையா, அ. திருநாவுக்கரசு செட்டியார் உதவியோடு 'முல்லைப் பதிப்பகத்தை' நிறுவினார். மிகக் கவர்ச்சியாக கவிஞரின் நூல்களை, முல்லை முத்தையா பதிப்பித்து வெளியிட்டார். அப்பொழுது முல்லைப் பதிப்பகம் பிராட்வே 59-ஆம் எண் கட்டடத்தில் இருந்தது.

**இலக்கிய மண்டபம்**

முல்லைப் பதிப்பகத்துக்குக் கவிஞர் அடிக்கடி வருவார்; தங்குவார். கவிஞரைக் காண அங்கே புதுமைப்பித்தன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், நாரண துரைக்கண்ணன், பேராசிரியர் அன்பழகன்

## தொழிலாளர் துணை!



இந்த உலகினில் யாரும்- நல்
இன்ப மெனும்கரை ஏறல்
சந்ததமும் தொழி லாளர் - புயம்
தரும் துணையன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை!

காஞ்சி மணிமொழியார், கொத்தமங்கலம் சுப்பு, 'சக்தி' ஆசிரியர் தி.ஜ.ர., டி.வி. நாராயணசாமி, கலைஞர் டி.கே. சண்முகம், கவிஞர் கம்பதாசன், கவியரசு கண்ணதாசன், மே. சக்கரவர்த்தி நயினார், எஸ்.வி. லிங்கம் ஆகியோர் வருவார்கள். அப்பொழுதெல்லாம் முல்லைப்பதிப்பகம் ஓர் இலக்கிய மண்டபமாகவே காட்சி அளிக்கும்.

**அறிஞர் அண்ணா**

அறிஞர் அண்ணா அவர்களும் சென்னைக்கு வரும் போதெல்லாம் முல்லைப் பதிப்பகத்துக்கு வருகை புரிவார். அவரைக் காண இயக்கத் தோழர்கள் பலர் வருவார்கள்.

**புதுவையில் சொந்த வீடு**

முல்லைப் பதிப்பகத்துக்கும் கவிஞருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. பொதுவாக பதிப்பாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நிலவுகின்ற ராயல்டி முழுஉரிமை போன்ற பிரச்சனைக்கே இடமில்லை. கவிஞரின் தேவைக்கெல்லாம் அவ்வப்போது முத்தையா பணம் கொடுத்து வந்தார்.



**புரட்சிக் கவிஞரின் "பிசிராந்தையார்" நாடக நூலுக்கு 'சாகித்திய அகதெமி' 1969ம் ஆண்டிற்கான பரிசு வழங்கியது.**

முல்லை முத்தையா அவர்களின் முயற்சியினால், புதுவையில் கவிஞர் சொந்த வீடு வாங்கினார்.

**முல்லை முறுவல்**

1946-ல் முல்லை மாத இதழை முல்லை முத்தையா தொடங்கினார். அதன் ஆசிரியரும் உரிமையாளரும் அவரே. கவிஞர் அதன் ஆதரவாளர். கவிஞரின் கவிதையும், கவிஞரைப்பற்றிய சுவையான கருத்துகளும், அறிஞர் பலருடைய கட்டுரைகளும் தாங்கிச் சிறப்பாக வெளிவந்தது. வாசகர்களிடையே 'முல்லை'க்கு நல்ல வரவேற்பு காணப் பட்டது.

''முல்லையின் முயற்சியில் தமிழ்த்தாய் அரியாசனம் ஏறுவாள்'' எனத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பாராட்டுத் தெரிவித்தார்.

**கவிஞரைப் பற்றிய முதல் நூல்**

1946-ல் கவிஞரைப் பற்றி முதன் முதலாக அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆகியோரிடமிருந்து முல்லை முத்தையா பெரு முயற்சி எடுத்து, கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துரைகள் சேகரித்துப் 'புரட்சிக் கவிஞர்' என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார். அந்நூல் நான்கு பதிப்புகள் வெளி வந்துள்ளது.

'பாரதியாருக்குப் பிறகு நான் பாராட்டக் கூடிய கவிஞனே இல்லை' என்று கூறிய நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு முல்லை முத்தையா கவிஞரின் நூல்களைக் கொடுத்து அறிமுகப்படுத்தினார்.

**நிதிக்குழு அமைப்பு**

முல்லைப் பதிப்பகத்தில் 1946-ல் கவிஞருக்கு நிதி திரட்டி அளிப்பதற்காக கவிஞரிடம் அபிமானம் கொண்ட பலர் சேர்ந்து குழு அமைத்தனர். அறிஞர் அண்ணா பொருளாளராகவும், டி.என். ராமன், முல்லை முத்தையா செயலாளராகவும் இருந்தனர்.

அவ்வப்போது குழுவில் சிலரைச் சேர்த்து, பின்னர் காஞ்சிக்கு மாற்றப் பட்டது.

'கல்கி' ஆசிரியர் திரு.ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களை முல்லை முத்தையா சந்தித்துப் பேசி, நிதிக்குழு அறிக்கையைக் 'கல்கி' இதழில் வெளியிடச் செய்தார்.

**நிதி அளிப்பு**

சென்னை பச்சையப்பன் விளையாட்டுத் திடலில் 1946 ஜூன் மாதம் 29-ல் நாவலர்



துணைவியார் பழனியம்மையாருடன் பாவேந்தர்

சோமசுந்தரபாரதியார் தலைமையில் கவிஞருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நிதி அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றது. அதை அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பாகச் செய்தார்.

**ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு**

புதுவை அரசுப் பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்ததிலிருந்து கவிஞர் 1946 நவம்பர் மாதம் ஓய்வு பெற்றார்.

**திருச்சியில் மணிவிழா**

யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை ஏற்பாட்டில், திருச்சியில் 1950-ல் கவிஞருக்கு மணிவிழாக் கொண்டாடி, பொன்னாடை போர்த்தி, ஆயிரம் ரூபாய் நிதியும் அளிக்கப் பெற்றது.

**வசந்தா திருமணம்**

1951-ல் கவிஞரின் இரண்டாவது மகள் வசந்தாவுக்கும், தண்டபாணிக்கும் திருமணம் நடைபெற்றது.

**ஆட்சிமொழிக் குழு**

குளித்தலையில் இளமுருகு பொற்செல்வி ஏற்பாட்டில் நடைபெற்ற ஆட்சிமொழிக் குழுவுக்குத் தலைமை வகித்தார்.

**ரமணி திருமணம்**

கவிஞரின் மூன்றாவது மகள் ரமணிக்கும் சிவசுப்ரமணியத்துக்கும் 1954-ல் திருமணம் நடைபெற்றது.

**சட்ட மன்றத்துக்குத் தேர்வு**

1954-ல் புதுவை சட்ட மன்றத் தேர்தலில் கவிஞர் வெற்றி பெற்று, சட்டமன்றத்துக்குத் தலைமை வகித்தார்.

**மன்னர் மன்னன் திருமணம்**

கவிஞர் மகன் மன்னர் மன்னனுக்கும் மைசூர் சாவித்திரிக்கும் 1954 சூன் மாதம் தேசபக்தர் கோவை அ. அய்யாமுத்து தலைமையில் புதுவையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

**தமிழகப் புலவர் குழு**

தமிழகப் புலவர் குழுவினர், கவிஞரைச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர்.

**திரைப்பட முயற்சி**

1961-ல் புதுவை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பாலசுப்ரமணியம், கவிஞரின் மருமகன் தண்டபாணி, புவனகிரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கூட்டுறவில், கவிஞரின் 'பாண்டியன் பரிசைத்' திரைப் படமாகத் தயாரிக்கத் திட்டமிட்டுச் சென்னையில் அலுவலகம் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

**எழுத்தாளர் சங்கம் கௌரவிப்பு**

1962-ல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களால் கவிஞருக்குப் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கப்பட்டது.

**பாரதியார் திரைப்பட முயற்சி**

மகாகவி பாரதியார் வரலாற்றை 1963-ல் திரைப்படமாகத் தயாரிக்கக் கவிஞர் முயன்றார். பாதியாராகக் கவிஞரே நடிப்பதாக இருந்தார். முயற்சி வெற்றி பெறவில்லை.

**கவிஞரின் மறைவு**

1964- ஏப்ரல் மாதம் கவிஞருக்குத் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

உடனே சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஏப்ரல் 21-ம் நாள் கவிஞர் இயற்கை எய்தினார். பாடிப் பறந்த குயில் மறைந்தது. தமிழுக்கு பெரிய இழப்பு; தமிழர்கள் துக்கம் அடைந்தனர்.

மறுநாள் கவிஞரின் உடல் புதுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு, புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பெற்றது.

**நினைவு மண்டபம்**

புதுவை நகராட்சி 1965-ல் கவிஞர் நினைவு மண்டபத்தை எழுப்பியது.

**சென்னையில் உருவச் சிலை**

1968 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் சென்னை கடற்கரையில் கவிஞரின் முழு உருவச்சிலை நிறுவப்பெற்றது.

**மத்திய அரசின் பரிசு**

1969-ல் கவிஞர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடகத்துக்கு மத்திய அரசின் சாகித்திய அகாடமியினால் ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பெற்றது.

**பிறந்த நாள் விழா**

புதுவை அரசு 1971 ஏப்ரல் மாதம் 29-ம் நாள் கவிஞரின் பிறந்த நாளை அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடியது.

**நினைவு நூலகம்**

புதுவை, பெருமாள்கோவில் தெருவில் இருக்கும் கவிஞரின் இல்லத்தைப் புதுவை அரசு விலைக்கு வாங்கி, கவிஞரின் குடும்பத்தாருக்கு உதவி புரிந்து, அந்த இல்லத்தைக் கவிஞரின் நினைவு நூலகமாகவும் காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

**கவிஞரின் உருவப்படம்**

தமிழக அரசு 1975-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கவிஞரின் முழு உருவ வண்ணப்படத்தைத் திறந்து வைத்தது.




**கவிஞர் பாரதிதாசனுக்கு**

**யானைப் பெட்டியில்**

**ஓட்டு அளித்து ஆதரியுங்கள்!**

**(கவிஞர் பங்கு பெற்ற தேர்தல் விளம்பரச் சுவரொட்டி)**

---

1978-ல் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் கொண்டாடப் பட்டது. 'பாவேந்தர் விருது அறிமுகம் செய்யப் பட்டது. முதன் முதலாக அந்த விருது உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டது 1978 முதல் ஆண்டுதோறும்பாவேந்தர் விழா வைத் தமிழக அரசு கொண்டாடி வருவதுடன் பாவேந்தர் விருதையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

(பாவேந்தர் பாரதிதாசன் பெருமை - நூலிலிருந்து)

TNPSC

விளம்பர எண்: 10/90.

தமிழ்நாடு பொதுப்பணியில், சமூகநலத் துறையில் உதவி இயக்குநர் (சிறப்பு பள்ளிகள்) (Assistant Director (Special Schools) ) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 14.5.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்கு பொருந்தாது).

**வயது:** 1.7.1990 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

**QUALIFICATIONS:**

(i) A Post Graduate degree and

(ii) B.Ed. degree and

(iii) Senior Diploma in Teaching the visually or hearing handicapped or mentally handicapped, and

(iv) Experience for a period of not less than five years as a teacher in a school for visually handicapped or hearing handicapped or mentally handicapped.

NOTE: Regular members in any of the services of the Government of Tamil Nadu may also apply even if a period of five years has elapsed since the date of their regular first appointment under the Government of Tamil Nadu provided they satisfy the prescribed qualifications vide item (i) to (iv) including age limit.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/ அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அல்லது அதற்கு பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) -யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/863/MS/90/MCS(863)

# சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகள் தொடக்க விழா!

சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் தொடக்க விழா 14.4.'90 அன்று தமிழ்ப்புத்தாண்டு நாளில் - பெரம்பூரில் உள்ள கன்னிகாபுரம் - மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்த இவ்விழாவிற்கு, மாண்புமிகு மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள் தலைமை தாங்கினார்.

## விழாப் பணிகள் விவரம்

சென்னையில் 14.4.90 புத்தாண்டு நாளன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விவரம் வருமாறு:

1. தெலுங்கு-கங்கை குடிநீர்த் திட்டப் பணிகள் தொடக்கம்: ரூ. 505 கோடி செலவில், ஆண்டுக்கு 12,000 மில்லியன் கனஅடி கிருஷ்ணா நதிநீரைச் சென்னை மாநகருக்குக் குடிநீராக வழங்கும் திட்டம்.

2. கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், கூடுதல் சுத்திகரிப்பு நிலையம் தொடக்கம்: ரூ. 3 கோடியே 71 இலட்சம் செலவில், கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் கூடுதல் திறன்கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

3. குடிநீர் மற்றும் கழிவுநீர் வரிகள் - குடிநீர்க் கட்டணம் வசூலிப்பதற்கான நுகர்வோர் அட்டை அறிமுகம்.

4. நடைபாதைவாசிகளுக்கு, இரவில் தங்கும் விடுதி கட்டும் திட்டம் தொடக்கம்.

5. நகர்ப்புற நலிவுற்றோர் வீடுகள் மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்.

6. நடைபாதைவாசிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் அளித்தல்.

7. நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பயிற்சிக்கான உதவித்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.

மாண்புமிகு தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்களும் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களும் இந்த விழாவில்கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத் தலைவர் திரு ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை யாற்றினார். பெரம்பூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு செங்கை சிவம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு எஸ்.கே. சர்மா, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. ஆகியோரும் இவ்விழாவில் சிறப்புரை யாற்றினார்கள்.

சென்னை மக்கள் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் பொன்னாடை அணி விக்கப்பட்டு, நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''இந்தியாவிலேயே குடிநீர்த்தட்டுப்பாடு அதிகம் உள்ள நகரமாக நமது சென்னைதான் இருக்கிறது. சென்னைக் குடிநீர்த் திட்டத்தைச் செம்மைப்படுத்து வதற்காகப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படவிருக்கின்றன. தெலுங்கு-கங்கை குடிநீர்த் திட்டப் பணிகள் முடிந்த நிலையோடு, இங்கே கிருஷ்ணா நதி நீரைச்சேகரித்து வைக்கத் தக்கபடி புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளின் கரைகளையும் உயர்த்த வேண்டியதிருக்கிறது; புதிய நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும்; ராமஞ்சேரி, திருத்தண்டலம் ஆகிய இடங்களில் புதிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கும் திட்டம் இருக்கிறது.

''தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் முதல் கட்டத் தின்கீழ் 505 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் உலக வங்கி உதவியான 300 கோடி ரூபாய் தவிர - மத்திய அரசின் வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம்

(ஹட்கோ) 125 கோடி ரூபாயும், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (எல்.ஐ.சி.) 50 கோடி ரூபாயும் வழங்கும். இத்திட்டம், சென்னை நகர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

"நடைபாதைவாசிகள் தங்குமிடம் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், சென்னையில் உள்ள கண்ணப்பர் திடலில் 120 நடைபாதைவாசிகளும், பேசின் பாலத்தில் 160 நடைபாதைவாசிகளும், தங்குவதற்குத் தகுந்தாற்போல் விரைவில் விடுதிகள் கட்டப்படும்; இதற்காக மத்திய அரசு ஒரு நபருக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் மொத்தம் எட்டு இலட்சம் ரூபாயும், ஹட்கோ இருபது இலட்சம் ரூபாய் கடனும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பத்து இலட்ச ரூபாயும் அளிக்கும். இவ்விடுதிகளில் தங்க, ஒருவருக்கு ஒரு ரூபாயிலிருந்து ரூபாய் 1.50 வரை வசூலிக்கப்படும்.

"இந்தியாவிலேயே முதன்முதலாகத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்ட மாநிலம் நமது தமிழ்நாடுதான்; அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அந்தச் சாதனை, அரசு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல், நம்முடைய கலைஞராட்சிக் காலத்தில்தான் இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டு, ஏழை-எளிய மக்களுக்காக அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன."

—இவ்வாறு மாண்புமிகு மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இதன்பின், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் - சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கல் அமைப்பின் 75 ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பு மலரை வெளியிட்டார்; முதல் மலரை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் பெற்றுக்கொண்டார்.



**இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி**
**இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!**
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!**
**வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?**

சென்னைக் குடிநீர் வாரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள் வழங்கியும்- சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்களில் மிக முக்கியமான திட்டம் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குகின்ற திட்டமாகும். சென்னை மாநகரம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியிருப்பதை உணர்ந்துதான் தெலுங்கு-கங்கைத் திட்டத்தை, இன்று நேற்றல்ல; 1970-ம் ஆண்டிற்கு முன்பிருந்தே தமிழக அரசின் சார்பாக மேற்கொண்டோம்.

"அன்றைக்கிருந்த ஆந்திர முதலமைச்சரோடு தொடர்பு கொண்டோம்; மத்திய அரசோடு தொடர்பு கொண்டோம். ஆனால் அன்றைக்கிருந்த மத்திய அரசு, மாநிலத்தினுடைய கோரிக்கையைக் காதிலே போட்டுக் கொள்ளாமலே காலங்கழித்து, 1976-ஆம் ஆண்டு வரையில் அதைப்பற்றிச் சிந்தனை செய்யாமலே இருந்த காரணத்தாலேதான்- அவர்களுடைய அலட்சியத்தை எண்ணிப் பார்த்து,'தெலுங்கு-கங்கை வருகிறபடி வரட்டும்; அதற்கிடைக் காலத்திலே ஓரளவாவது சென்னை மக்களுடைய தாகத்தைத் தீர்க்கின்ற வகையில் வீராணம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த- அடிக்கல் நாட்டிய- அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்த நேரத்திலே ஈடுபட்டேன்.

"ஆகையால், அதிலே ஏற்பட்ட எதிர்பாராத சில காரணங்களினால்- ஒப்பந்தக்காரரே மறைந்துவிட்ட காரணத்தால்-அந்தத் திட்டத்தை அரசே ஏற்று நடத்துவதென்று அமைச்சரவையிலே ஒரு முடிவெடுத்து, அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட அந்த முடிவை அன்றைக்கிருந்த மத்திய அரசிற்கு அன்னை இந்திரா காந்தியின் அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தோம். அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாதது மாத்திரமல்ல; நான் எழுதிய அந்தக் கடிதத்தினையும், கோப்புகளையும் கையிலேயே வைத்துக்கொண்டு, அங்கீகாரம் வழங்காமலே இருந்தார்கள்.

"இந்தக் கால கட்டத்திலேதான் இங்கே மத்திய அமைச்சர் மாறன் குறிப்பிட்டதைப் போல், எமர்ஜென்சி பிரகடனப்படுத்தப்பட்டது. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தால் அன்றையதினம் நாம் எமர்ஜென்சியை ஆதரிக்கவில்லை. ஆதரிக்காதது மட்டுமல்ல; எதிர்த்த காரணத்தால் கழக ஆட்சி 76-ஆம் ஆண்டு தொடக்கத்தில் கலைக்கப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். அப்படிக் கலைக்கப்பட்ட பொழுதுதான், அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டுத் தமிழ்நாட்டுக்கு எவ்வளவோ நன்மைகளையெல்லாம் செய்யப் போகி



கல்வி இல்லாத
களர்நிலம்! அந் நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!

றேன் என்று கூறி, அதிலே ஒரு நன்மையாகத்தான் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா தண்ணீரை வழங்கப் போகிறேன் என்று அறிவித்தார்கள்.

பிறகு தமிழகத்தின் முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சர், இந்தியப் பிரதமர் ஆகியவர்களெல்லாம் கலந்து கொள்கிற ஒரு பெரிய விழா நடத்தி, தெலுங்கு-கங்கை திட்டத்திற்குத் தொடக்கத்தைச் செய்தார்கள்.

"தொடக்கம்தான் நடைபெற்றதேயல்லாமல் அதன் பிறகு ஒரு ஐந்தாறு ஆண்டுக்காலம் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. 40 அல்லது 45 கோடி ரூபாய் ஆந்திரத்திற்கு அந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு அளித்தது. அதன் பிறகு ஒப்பந்தப்படி பணம் அனுப்பப்படாத காரணத்தால், ஆந்திரப்பகுதியில் தெலுங்கு-கங்கைத்திட்டத்திற்காக நடைபெற வேண்டிய பணிகள் நடைபெறாமலேயே நின்று விட்டன.

"மீண்டும் கழக ஆட்சி வந்தது. இந்த ஆட்சி வந்தவுடன் ஏற்கெனவே தொடங்கிய வீராணம் திட்டம், நாம் எதிர்பாராமல் கிடைத்த கிருஷ்ணா திட்டம் இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, கிருஷ்ணாநதித் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமென்று முடிவு எடுத்து, உடனடியாக,இங்கே நமது தலைமைச் செயலாளர் குறிப்பிட்டதைப்போல், ஆந்திரத்திற்குச் சென்று முதலமைச்சராக இருந்த என்.டி. ராமாராவ் அவர்களைச் சந்தித்துப் பேசி மீண்டும் சென்னைக்கு, கிருஷ்ணா நதித் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இருசாராரும் ஒப்புக்கொண்டு, மேலும் தரவேண்டிய தொகையையும் அவர்களுக்குத் தந்தோம்.

"அடுத்து என்.டி.ராமாராவ் அவர்களுடைய ஆட்சி, கடந்த தேர்தலிலே மாற்றப்பட்டு அங்கு காங்கிரஸ் கட்சியின் ஆட்சி சென்னா ரெட்டி அவர்களின் தலைமையில் அமைந்தபோது சில பேர் சந்தேகப்பட்டார்கள். அங்கே ஆட்சி மாறி இருக்கிறதே, சென்னைக்குத் தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேறுமா என்று! அந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் முதலமைச்சர் சென்னா ரெட்டி அவர்கள் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமென்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தார். அவரைப் பாராட்டி, கடந்த ஆளுநர் உரையிலேயே அவருக்கு நன்றி தெரிவித்தோம்.

"பாராட்டு, நன்றி இவைகளோடு முடிந்து விடாமல், நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் மீண்டும் ஒரு முறை ஐதராபாத்திற்குச் சென்று, சென்னாரெட்டியைச் சந்தித்து, மேலும் தரவேண்டிய தொகையை அவர்களுக்குத் தந்து இந்தத் திட்டத்தை விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

"அங்கிருந்து ஆந்திர மாநில அதிகாரிகள் சென்னைக்கு வந்தார்கள்; நம்முடைய தலைமைச் செயலகத்திலே நானும், அமைச்சர்களும், அந்த அதிகாரிகளோடு கலந்துபேசி, இந்தத் திட்டத்தை-எப்படியும் 92-ஆம் ஆண்டு இறுதிக்குள்- 93-ஆம் ஆண்டு தொடக்கத்தில்- சென்னை நகரவாசிகள் தெலுங்கு கங்கைத்தண்ணீரைக் கையில் எடுத்து அதை அருந்துகின்ற காட்சியை நாங்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

"அப்படியானால் இன்றைக்கு நடைபெறுகின்ற விழா, என்ன விழா?

"92-ஆம் ஆண்டு இறுதியிலே கிருஷ்ணா தண்ணீர் தெலுங்கு-கங்கை என்ற பெயரோடு சென்னை நகரத்திற்குள் வருகிற நேரத்திற்குள், அதைப் பயன்படுத்திக் கொள்கின்ற முன்னேற்பாடுகளுக்கான அடிக்கல் நாட்டு விழாதான் இன்றைக்கு நடைபெறுகிறது. அந்தத் திட்டத்திற்கு கிருஷ்ணா தண்ணீர் சென்னை எல்லையைத் தொடுகிறவரையிலே ஆகக்கூடிய செலவு ஏறத்தாழ 300 கோடியைத் தாண்டும். ஏற்கெனவே போட்ட திட்டத்தைவிட நூறு அல்லது நூற்று இருபது கோடி ரூபாய் அதிகமாகும். சென்னைக்குள் அது வந்தபிறகு, அதைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தொடர்ந்து செய்ய வேண்டிய செலவு ரூ.500 கோடியைத் தாண்டும்.

"மொத்தத்தில் 800 கோடியைத் தாண்டக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!' என்கின்ற அந்த உறுதியோடும், அந்தக் குறிக்கோளோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு இந்த அரசாகும். அதைப்போலவே 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசு தி.மு.கழக அரசு. அந்த அரசிற்குத் துணையாக இன்றைக்கு டில்லியிலே இருக்கின்ற தேசிய முன்னணி அரசு நாம் போடுகின்ற திட்டங்களுக்கெல்லாம் கூடுமானவரையில் அங்கீகாரம் அளித்து அந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்ற உதவிகளைச் செய்து வருகின்றது.

"இப்படி ஏழை-எளியோர்கள் கிராமப்புறத்து மக்கள், மாநகரங்களில்கூட சந்து, பொந்துகளிலே வாழ்கின்றவர்கள், சேரிகளில் வாழ்கின்றவர்கள், குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்கள் ஆகியோருடைய நல்வாழ்வை மையமாக வைத்து இந்த அரசு, தொடர்ந்து தன்னுடைய பணிகளை ஆற்றும் என்ற உறுதியினை உங்களுக்குத் தந்து அதனுடைய அடையாளமே இந்த விழா என்று கூறிக் கொள்கிறேன்."

—இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல்.ஆர்.

TNPSC

**விளம்பர எண்: 11/90**

# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

30.9.1989 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினத்தந்தி ஆகிய நாளிதழ்களிலும் 7.10.89 அன்று இந்து நாளேட்டிலும் வெளியிடப்பட்ட தேர்வாணைய விளம்பர எண் 55, நாள் 21.9.89-ன் தொடர்ச்சியாக கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு தொகுதி இரண்டு மற்றும் தொகுதி மூன்றில் அடங்கிய கூட்டுறவுச் சார்நிலைப்பணி முதுநிலை ஆய்வாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட நடத்தப்படும் நேரடிப் போட்டி முதனிலைத் தேர்வுக்கு உடல் ஊனமுற்ற நபர்களிடமிருந்து மட்டும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

21.9.89 நாளிட்ட விளம்பர எண் 55-ல் கோரியபடி முதுநிலை ஆய்வாளர் பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள், அவர்களது விண்ணப்பங்களில் உடல் ஊனமுற்றவர் எனக் குறிப்பிடாமலிருந்தாலும் தகுந்த மருத்துவச் சான்றிதழ் அனுப்பாமலிருந்தாலும் புதிதாக விண்ணப்பம் அனுப்பத் தேவையில்லை. அவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விபரத்தினை செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு கடிதம் எழுதித் தெரிவித்தால் போதுமானதாகும். முந்தைய விண்ணபத்தில் குறிப்பிட்டிருந்த தேர்வு மையத்தின் பெயரையும் கடிதத்தில் தவறாமல் குறிப்பிட வேண்டும். விண்ணப்பிப்பவர்கள், அப்பதவிக்குத் தகுதியானவர்களாய் இருப்பதுடன் அவர் உடல் ஊனமுற்றவர் என்றும், அந்த ஊனம் தெரிவு செய்யப்படும் பதவியில் செவ்வனே பணியாற்ற தடையாக இருக்காதென்றும் தமிழக அரசுப்பணிகளில் பணியாற்றும் உதவி அறுவை மருத்துவ அலுவலர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் இருக்கும் மருத்துவ அதிகாரியிடமிருந்து 1.4.90க்குப் பிறகு பெறப் பட்ட சான்றிதழின் நகலை அனுப்பி வைக்கவேண்டும். மேற்கண்ட விவரங்களுடன் கூடிய சான்றிதழுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## பட்டியல்

| வ. எண் | பணி மற்றும் பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை | 1.7.89 அன்று வயது | கல்வித்தகுதி | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|
| 1. | தொகுதி 2<br>தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவுச் சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் (எல்லா வகுப்பினரும்) | 1 | மாதம் ஒன்றுக்கு ரூ.1400-40-1600-50-2300-60-2600 | 30 வயதிற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை. | பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ., பி.எஸ்.சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பி.பி.ஏ. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஓ.எல். பட்டம் அல்லது ஊரகப் பணியில் பட்டயம் அல்லது பட்டயக் கணக்கர்களுக்கான நிலையங்களில் இணை உறுப்பினர்களுக்கான பட்டயம். | |
| 2. | தொகுதி 3<br>தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர் | 1 | மாதம் ஒன்றுக்கு ரூ.1400-40-1600-50-2300-60-2600. | வயது வரம்பு இல்லை | இன்டர்மீடியட் அல்லது புகுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். | தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப் பட்ட பழங்குடியினருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது. |

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தேர்வாணைய அலுவலகத்தில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 15.5.90, மாலை 5.45 மணிக்குள்.

நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும், விண்ணப்பப்படிவமும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் கோரும் மனு தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயரைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, ரூபாய் ஐந்துக்கு அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட சுயவிலாசமிட்ட உறையுடன் அனுப்பப்பட வேண்டும். கோரிக்கை பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்கவேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR 873/MS/90/SASI



# இலவச அரிசி வழங்கு விழா

**த**மிழ்ப்புத்தாண்டையொட்டி, ஏழை எளிய மக்களுக்குத் தமிழக அரசின் இலவச அரிசி வழங்கும் விழா 11.4.90 அன்று சென்னை, துறைமுகம் தொகுதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களும் பங்கேற்ற இந்த விழா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் நியாய விலைக் கடைகளின் சார்பில் நடத்தப்பட்டது.

விழாவின் தொடக்கத்தில்- உணவு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை அரசுச் செயலாளர் திரு. இரா. பூரணலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தமது முன்னிலை உரையில்- ‘‘ஏழை எளிய மக்களும் மகிழ்வோடு விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்ற வகையில் சென்ற ஆண்டு 82 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களால் இப்போது 121 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பத்தார்களுக்குப் பயனளிப்பதாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது’’ என்றார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள், தமது தலைமையுரையில்,–

‘‘சென்ற ஆண்டு இந்த இலவச அரிசி , மாத வருமானம் முந்நூறு ரூபாய்க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது; பிறகு அத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, மாத வருமானம் ஆயிரம் ரூபாயும் அதற்குக் குறைவாகவும் உள்ளவர்களுக்கு ஆண்டுக்கு மூன்று முறை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி சுமார் 60,741 டன் அரிசி ஒவ்வொரு முறையும் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு ஒரு முறை அரிசி வழங்க, அரசுக்குச் சுமார் 12 கோடி ரூபாய் செலவாகிறது’’ என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து - மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இவ்விழாவில் இலவச அரிசி வழங்கிப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

‘‘சமுதாயத்திற்காகப் பல நன்மைகளை ஒரு அரசு செய்யும்போது அதிலே நலிவுற்ற மக்களுக்கு நன்மை போய்ச்சேர வேண்டும் என்று ஒரு அரசு கருதும்போது- அந்த நன்மைகளைப் பெறுகின்ற மக்களும் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். அந்த நன்மைகளை மக்களிடத்திலே கொண்டு போய்ச் சேர்க்கின்ற பெரிய அதிகாரிகளிலிருந்து கடைசியாக இருக்கின்ற கடைநிலை ஊழியர்



சங்க நாதம்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

வரை அவர்களும் ஆர்வத்தோடு, இதய சுத்தியோடு பாடுபட வேண்டும். இல்லாவிட்டால் என்னதான் பெரிய திட்டங்களை ஒரு அரசாங்கம் தீட்டினாலும் கூட, அது போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலே எங்கெங்கோ தங்கிவிடும்.

"இந்த ஆண்டு நியாய விலைக் கடைகளில் அரிசிவிலையைசற்றே ஏற்ற வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது, உங்களுக்குத் தெரியும். கடந்த ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது- பொறுப்பேற்ற மறுநாளே மத்திய சர்க்கார் அரிசி விலையை ஏற்றி விட்டது. இருந்தாலும் நாங்கள் ஏற்றப் போவதில்லை என்று சொன்னோம். மீண்டும் மீண்டும் தொடர்ந்து மத்திய சர்க்கார், அரிசி விலையை ஏற்றிய காரணத்தினாலும் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களில் எல்லாம் இப்பொழுது நாம் இன்றைக்கு விற்கின்ற விலையைவிட இருபது காசு, முப்பது காசு, ஐம்பது காசு அதிகம் வைத்து அரிசி விற்கப்படுகின்ற காரணத்தாலும், நாம் இங்கே சற்று அரிசி விலையை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

"இந்த அரசாங்கம் பொது மக்களுக்கு நியாய விலைக் கடைகள் வாயிலாக அரிசியை வழங்குகின்றதென்றால்- தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு போன்ற வேறு சில மாவட்டங்களிலே கூட நாம் நெல்லைக் கொள்முதல் செய்து அரிசி ஆக்க வேண்டியிருக்கின்றது. விவசாயிகள் தங்களுடைய இடுபொருள்களின் விலை அதிகமாகிவிட்ட காரணத்தாலும், விவசாயத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய ஊதியம்- நான் ஊதியம் அதிகமாகிவிட்ட காரணத்தாலும், கொள்முதல் விலையை ஏற்றிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொள்முதல் விலையைக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 25 ரூபாய் அதிகமாக ஏற்றி நெல்லை விளைவிக்கின்ற விவசாயிகளுக்குத் தருகின்றோம். அது மாத்திரமல்ல; அஃதன்னியில் மேலும் 35 ரூபாய் அவர்களுக்குப் போனசாகவும் தருகிறோம்.

"எனவே விவசாயிகளிடத்திலே இருந்து கொள்முதல் செய்கின்ற அரிசியின் விலை அதிகமாக இருக்கின்றது. அது நமக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் டன் மத்திய அரசிடமிருந்து வாங்குகிறோம். அதனுடைய விலையும், இங்கே விற்கப்படுகின்ற விலையைவிட அதிகமானது. அதைக்கொண்டு வந்து சேர்க்கின்ற வரையில்- அந்த அரிசியின் விலையை வைத்துப் பார்த்தால் இதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

"மத்திய சர்க்கார் கொடுக்கின்ற அரிசியும், மாநிலத்திலே நாம் கொள்முதல் செய்கின்ற அரிசியும் போதாமல் பக்கத்து மாநிலங்களிலேகூட நாம் விலை கொடுத்து அரிசியை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த விலையும் அதிகமாக இருக்கிறது. இப்படி அதிக விலை கொடுத்து விவசாயிகளிடமிருந்தும், பக்கத்து மாநிலங்களிலேயிருந்தும், மத்திய சர்க்காரிடமிருந்தும் நாம் அரிசியை வாங்குகின்ற காரணத்தால், நமக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியை விற்பதில் இந்த அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம் சுமார் 180 கோடி ரூபாய்.

"அதையன்னியில் சத்துணவுத்திட்டத்திற்காக- குழந்தைகளுக்குச்சத்துணவு வழங்குவதற்காக நாம் அதிக விலை கொடுத்து அரிசியை வாங்கி, அதைக் குழந்தைகளுக்கு இலவசமாக, சத்துணவிற்காக வழங்குகின்ற வகையில் 100 கோடி ரூபாய் நஷ்டத்திற்கான பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்க வேண்டியிருக்கின்றது. ஆயிரம் ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருமானமுள்ள ஏழை எளிய நடுத்தர மக்களுக்காக, மூன்று பண்டிகைகளுக்கு இலவச அரிசி வழங்க பண்டிகை ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 36 கோடி ரூபாய் நஷ்டத்தையும் இந்த அரசு ஏற்க வேண்டியிருக்கின்றது. எனவே ஏறத்தாழ 320 கோடி ரூபாய் மானியம்- அந்த நஷ்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இந்த அளவிற்கு விலையை ஓரளவிற்கு உயர்த்தியும்கூட 320 கோடி ரூபாய் நஷ்டம் என்கின்ற சூழ்நிலையிலேதான் அரிசி உங்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"36 கோடி ரூபாய் செலவழித்து இலவச அரிசி வழங்குகிறோமென்றால், ஏதோ கருணாநிதி வீட்டிலேயிருந்து கொண்டுவந்து வழங்கிடவில்லை. நீங்கள் தருகின்ற வரிப்பணம்- நீங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தருகின்ற வரிப்பணம்- அரசாங்கத்தின் கருவூலத்திற்கு வந்து, அது திரும்பவும் உங்களுக்குக் கிடைக்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சியே தவிர வேறல்ல. ஆனால், இதைக்கூடச் செய்யாத அரசுகள் உண்டு. நம்முடைய அரசு, நீங்கள் தருகின்ற வரிப்பணத்தை உங்களுக்கே பயன்படுத்துகின்ற அரசாங்கமாக இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு இந்தப் பணியினைச் செய்கிறோம்".

விழா முடிவில்-தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. டி.ஆர். சீனிவாசன் நன்றி கூறினார்.

-நிகழ்ச்சித்தொகுப்பு
பி.எல். ராஜேந்திரன்



## தமிழ் அமுது!

தமிழுக்கும் அமுதென்று பேர்- அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்- இன்பத்
தமிழ்எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்- இன்பத்
தமிழ் எங்கள்வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

# சூரிய விளக்கே

கவிஞர் அரசு மணிமேகலை

புரட்சிப்பிதா மகனே!
புதுயுக நெம்புகோலே!
சுயமாய் ஒளிதந்த
சூரிய விளக்கே!

கண்ணுக்குள் நிலவிய
கனவு மயக்கத்தைக்
கவிதைகள் மூலம்
கணத்தில் துடைத்தாய்!
புதுயுக விடியலுக்குப்
பூபாளம் இசைத்தாய்!

மனவயல்களில்
அன்று
மடமைப்பூக்களே
மண்டிக் கிடந்ததால்
கவிதை அரிவாளால்
களையெடுக்க முயன்றாய்!

முதுகெலும்புகளைத்
தாங்களே
முறித்துக் கொள்ளவும்
தயாராயிருந்த
அடிமைக் குணத்தவரை
உன் பாடல்களே
அமில குணத்தவராய்
மாற்றின...

வேட்டுப்போல்
வந்தவுன்
வீரக் கவிதையல்லவா
தூக்கத்தில் கிடந்த
நம்மக்களைத்
தூக்கி நிறுத்தி வைத்தது?

மூடப்பழக்கத்தின்
முதிர் இருளால்
நாடு
முற்றுகைக்கு
ஆளானபோது
நீயல்லவா
கவிதைக் கதிரவனாய்க்
கண்ணுக்கு
ஒளிதந்தது?

கோணல் முதுகுகளே
குலச்சொத்து
என்றவரை
வீரநடை
நடக்க வைக்க
வித்தகன் நீ
செய்ததென்ன?

'நீர்ப்பறவையா
பெண்?
இல்லையில்லை.
நெருப்புப் பறவை'
என்று
அனைவர்க்கும்
பெண்ணை
அடையாளம் காட்டினாய்.

பூமிக்கு வந்த
புரட்சிப்பெரு நெருப்பே!
நெருப்புப் பறவையின்
நெஞ்சார்ந்த வணக்கங்கள்...



# புது நெறி நிலைநாட்டுவோம்

கவிஞர் பொன்னடியான்

உலகப் பெருங்கவி
ஒப்பிலாப் புகழ்க்கவி
தலைமைத் தமிழ்க்கவி
தமிழின் உயிர்க்கவி
எங்கள் புரட்சிக்கவி- அவன்
என்றும் புதுமைக்கவி!
பாரதி தாசனின்
புகழ்பாடுவோம்! - அந்தப்
பாட்டுத் தலைவன்நல்
வழி நாடுவோம்!

மானிடர் ஆற்றலை
மதித்து வணங்கினான்!
மானமிகு கொள்கை
விதைத்து விளங்கினான்
எங்கள் புரட்சிக்கவி!- எம்
இதயத் துயர்ந்தகவி - தந்த
நிகரிலாப் புதுநெறி
நிலை நாட்டுவோம்!- அவன்
நினைவினை மனம் ஏற்றித்
துயர் ஓட்டுவோம்!

மன்தரின் மனவயல்
உழ, பாடுபட்டவன்!
இனிய அன்புப்பயிர்
நடவினை நட்டவன்
எங்கள் புரட்சிக்கவி!-மன
இருட்டை விரட்டுங்கவி!- அந்த
வேங்கையின் பெருமைகள்
நாம் போற்றுவோம்! - பழம்
விதிமாற்றிச் சமநீதிக்
கொடி ஏற்றுவோம்!



# சேம்ப்பியன்

## புதிது

# லைப்பாய்




சோப்புகளிலே சேம்ப்பியன், இப்போது முன்னைவிட சிறப்பேற்று வந்துள்ளது — புதிய லைப்பாய் — மிக நவீன தோற்றத்தோடும் நயமாகவும்! பெற்றிடுங்கள் சுத்தமான ஆரோக்கியமான லைப்பாய் உணர்வை — அளிப்பது சேம்ப்பியன் லைப்பாய் — அழுக்குடனே கிருமிகளைக் கழுவிக் களைவது.

**லைப்பாய் இருக்குமிடம்.**
**அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!**

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

LINTAS LB P 1 203 TM

# சீர்திருத்தக் கவிஞர்

## மன்னை ப. நாராயணசாமி

ஓர் இனம் அறியாமையின் காரணமாக ஏமாற்றப் பட்டு அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு நெஞ்சு பொறுக்காத நிலையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் சமுதாய நல்வாழ்விற்குப் பாடுபடப் பெருமக்கள் பலர் தோன்றி, எத்தனையோ வதைகளை அவர்கள் ஏற்று, சுரண்டுபவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றியும் பெறாது மடிந்துள்ளனர். இதுபோன்ற சரித் திரங்கள் பல, உலகில் உண்டு.

அதேபோல் தமிழ் இனம் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடுகின்ற நிலையை அறிந்து அதற்கான காரண




காரியங்களை நன்றாக உணர்ந்த பெருமக்கள் சிலர் அவரவர் காலத்தில், பல கருத்துக்களைச் சொல்லியும் அதற்காகப் போராடியும், குறுகிய காலத்தில் அழிந்து பட்டிருக்கின்றார்கள். அவர்கள் விட்டுப்போன கொள்கை களையும் ஆக்கபூர்வமான வழிகளையும் கண்டு கடுமை யான எதிர்ப்புகளுக்கிடையே தந்தை பெரியார் அவர்கள் தன் 96-ஆம் ஆண்டு வரையில் தமது வழியில் போராடி யும், கொள்கை முழக்கங்களை நிலை நிறுத்தியும் சென்றுள்ளார்கள்.

அவ்வழியில்தான் தமிழனுடைய, ஏன், மனிதனு டைய வளர்ச்சிக் கொள்கைகளைப் பாவேந்தர் தம் பாக்களால் பறை சாற்றினார். இவருக்கும் பல முனை களில் எதிர்ப்புகள்! பயந்தாரா? இல்லை!!

''கடவுள்கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்
கடவுள்என்ற நாமதேயம்
கனறிடாத நாளிலும்
உடமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்
கடையர் செல்வர் என்ற தொல்லை
கடவுள்பேர் இழைத்ததே

கடவுள் என்ற சொல் வந்த பிறகுதான் உழைப்பவன், சுரண்டுபவன், அடிமை, அரசன் என்ற பேதங்கள் உண்டானது என்பதை இவ்வாறு சிறப்பாக எடுத்துச் சொன்ன சீர்திருத்தக் கவிஞர் இவர்தான்.

தத்தம் மதம்தான் பெரிதென்று, பித்தர் போல் அலைந்து போராடிச் சாகின்ற இந்தச் சமுதாயத்திற்கு

பொன்னாடையும், பொற்கிழியும் வழங்கப்பட்ட மறுநாளில் எடுக்கப்பட்ட படம். பாவேந்தருடன், பேரறிஞர் அண்ணா, என்.வி. நடராசன், டி.வி. நாராயணசாமி மற்றும் பல நண்பர்கள் உள்ளனர்.





## தொழிலாளர் தடக்கை

**நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென**
**நின்ற இயற்கைகளே! உம்மைச்**
**சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி**
**லாளர் தடக்கைகளே!**

இந்நிலை ஏன் வந்தது தெரியுமா? புரட்சிக் கவிஞரே கூறுகிறார். 'அண்டுபவரை அண்டாவகை செய்வது எது? மதங்கள் அன்றோ?'

**''இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி**
**இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே**
**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!**
**வாயடியும், கையடியும் மறைவதெந் நாள்?**
**சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றை**
**சொத்தெல்லாம் தமக்கென்றேசொல்வார் தம்மை**
**விரட்டுவது பகுத்தறிவே!!!**

இவ்வாறு இந்தக் கொள்கைகளை அஞ்சாது உரைத்த ஒரே கவிஞர் பாவேந்தர்தான். ஆதலினால் பகுத்தறிவுள்ள மனிதன் எதனையும் பகுத்தறியாத் தன்மையினால் எவருக்கோ அடிமையாகிக் கொண்டிருக்கின்றான். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'கத்தியைத் தீட்டாதே - புத்தியைத் தீட்டு' என்று சொன்னதுபோல, சமுதாயத்தில் அறிவுபெற வேண்டும் என்று பலர், பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல காதலர்களைச் சித்திரித்துக் காட்டினர். அதுபோல, ஒரு பெண் எவ்வளவு திடமாகவும், காதலைவிடத் தன்னுயிர் மேம்பட்டதல்ல என்பதாகவும், காதலுக்கு இடையூறாக உள்ள சாதி மதங்களை எப்படி எதிர்க்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் 'புரட்சிக் கவியில்' ஒரு பெண்ணைவிட்டுப் பேசச் சொல்கிறார் பாவேந்தர்.

புரட்சிக் கவியில் ஒரு காட்சி... தூக்குமேடைக்குச் செல்லுகின்ற காதலர்கள் இருவரில் காதலியைவிட்டுப் பேசச் சொல்கின்றார். பெண்மைக்கு எவ்வளவு துணிவு வேண்டும் என்பதைச் சித்திரிக்கிறார். அதில் ஒரு கட்டம்...

**ஆரத்தழுவி அடுத்தவினா டிக்குள்உயிர்**
**தீரவரும் எனினும் தேன்போல் வரவேற்பேன்**
**அன்றியும் என்காதல்அமுதே! நமதுள்ளம்**
**ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன, தாழ்வென்ன**
**சாதி உயர்வென்றும் தனததால் உயர்வென்றும்**
**போதாக்குறைக்குப் பொதுத் தொழிலாளர்சமூகம்**
**மெத்த இழிவென்றும் மிகுபெரும்பாலோரே எல்லாம்**
**சுதந்தி முனைகாட்டி காலமெல்லாம் ஏய்த்துவரும்**
**பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்**
**ஆவி களையேனும் அர்ப்பணம் செய்வோம்**

என்று காதலி பேசுகிறாள் துணிவோடு-துடிப்போடு!

தாய்மொழிப்பற்று தமிழனுடைய சமுதாயத்தில் இல்லாது போயிற்றே என்ற ஏக்கம், பாவேந்தர் உள்ளத்தில் வழிந்தது. எண்ணி எண்ணித் துடிக்கிறார்.

**''தமிழின் மேன்மையை இகழ்ந்தவனை**
**என் தாய் தடுத்தாலும் விடேன்!''**
**''இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?**
**எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!**
**செந்தமிழுக்குத் தீமை வந்திடின் - இந்த**
**தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?''**

— பாவேந்தர் அழுகிறார்.

என் புரட்சிக் கவிஞர், இளைஞர்களை நோக்கிக் கூறுகிறார். ''போர்க்களத்திற்குப் போ'' என்று உசுப்புகின்ற ஒரு பாட்டு.

**''மங்கை ஒருத்தி தரும்சுகமும்**
**மாத்தமிழுக்கு ஈடு இல்லை''**

என்று உரைத்துக் களத்திற்கு இளைஞர்களை அனுப்புகிறார் இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில்...

இப்பொழுது உள்ள சமுதாயத்திற்கும், வருங்கால சமுதாயத்திற்கும் வரைமுறை வேண்டும் அல்லவா? 'வெந்ததைத் தின்றுவிட்டு, விதி வந்தால் சாகின்ற நோஞ்சான் சமுதாயமாக வாழாது, வரையறுத்த குடும்பங்கள்தான் நாட்டின் பொருளாதார முன்னேற்ற வாழ்வுக்கு உகந்தவை என்ற ஒரு சிறந்த கொள்கையைப் பல ஆண்டுகளுக்கு முன்னே, விஞ்ஞானத்தின் வழியில் நின்று ஒரு கவிதை வாயிலாகச் சொல்லுகின்றார் பாவேந்தர்...

**''காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்தக்**
**கதவு ஒன்று கண்டறிவோம்'',**

என்கிறார்.

இவர் ஒரு புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல, எவருடைய விருப்பு வெறுப்புகளுக்கும் கவலைப் படாது போர்வீரர் போல் நின்று மக்களைச் சுரண்டுகின்றகூட்டத்தைத் தன் பேனா முனையால் தாங்க முடியாத அடிகளைக் கொடுக்கின்றார் - வீழ்ச்சியுற்ற தேகத்திலே வலிமையூட்டுகிறார்; தாய்மொழிப் பற்றற்ற தற்குறிகளுக்கும் உணர்வு ஏற்றுகின்றார். புரட்சிக் கவிஞரின் நோக்கமும் ஆசையும் நிறைவேறப் பாடுபடுவோமாக!

அவர் வழிநின்று உலக மகா கவிஞர், கலைஞர் அவர்கள், அவருடைய நினைவுகளை நிறைவேற்றி வருகிறார்.

# நலிவடைந்த கலைஞர்களின் வாழ்வை நலம்பெறச் செய்யும் இந்த அரசு

**- முதல்வர் கலைஞர்**



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 28 கலைஞர்களுக்கு இன்றைய தினம் 'கலைமாமணி' என்கின்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த மன்றம் 1972-ஆம் ஆண்டு வரையில் சென்னை 'சங்கீத நாடக சபா' என்ற பெயரிலே விளங்கியது. 1972-ஆம் ஆண்டு சங்கீதம், நாடகம் என்று மாத்திரமில்லாமல் இயலுக்கும் இந்தக் கலைஞர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும், இடமளிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு 'தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்' என்று இந்த அமைப்பிற்குப் பெயர் மாற்றப்பட்டது.

நம்முடைய கலைஞர்களின் சார்பிலே, பட்டம் பெற்றவர்களின் சார்பிலே நன்றி கூறிய தம்பி கவியரசு வைரமுத்து இங்கே குறிப்பிட்டதைப் போல், 600க்கு மேற்பட்டவர்களுக்கு இந்த



**எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்**
**இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்**
**செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்!**



மன்றத்தின் சார்பில் இதுவரையில் விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**இந்த விருதுகள் இதுவரையில் கடந்த ஆண்டு வரையில் அவர்களுக்கு ஆளுநர் அவர்கள் இங்கே அணிவித்தார்களே பதக்கம், அது ஒரு சவரன் மதிப்புள்ள விருதுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு முதல், இன்று முதல் இரண்டரைச் சவரன் மதிப்புள்ள விருதுகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.**

இரண்டரைச் சவரன் மதிப்புள்ள விருதுகள் இன்று வழங்கப்பட்டுள்ளன என்று நான் கூறுவதில் அந்தச் சவரனின் மதிப்பல்ல, சில நேரங்களில் நம்முடைய கலைஞர்கள் தங்களுக்கு அணிவிக்கப்பட்டுள்ள விருதுகளின் பதக்கங்களைக் கூட அடமானம் வைத்தோ அல்லது விற்றோ தங்களுடைய வாழ்க்கையை நகர்த்திக் கொள்ள வேண்டிய பரிதாபகரமான சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்

நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இரண்டரைச் சவரன் என்று அந்தப் பதக்கத்தைப் பெரிதாக அளிப்பதற்குக் காரணம், பதக்கம் பெரிதாக இருக்கவேண்டுமென்ற எண்ணமே தவிர, அதனுடைய மதிப்பு அதிகமாக இருந்தால் எதிர்காலத்தில் உங்களுக்குப் பயன்படும் என்பதற்காக அல்ல. அதைப் பயன்படுத்த வேண்டுமென்ற சூழ்நிலை உங்களுக்கு ஒன்று வருமேயானால் நீங்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை நாடுங்கள். அதனுடைய தலைவர்களும், நிர்வாகிகளும் எங்களை நாடுவார்கள். உங்கள் நிலையை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். **அந்தப் பதக்கங்களின்மீது நீங்கள் கைவைக்காமலேயே உங்களுடைய வாழ்க்கையை, நலிவடைந்த வாழ்க்கையை நலம் பெறச் செய்ய இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கின்றதென்பதை கலைவாணர் மண்டபத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில், கலைவாணரை மனதில் எண்ணிக் கொண்டு சொல்ல விரும்புகின்றேன்.**

கலைஞர்கள் இங்கே விருதுகள் பெற்றதை இந்த மாமன்றத்தில் குழுமியிருக்கின்ற நீங்களெல்லாம் பார்த்தீர்கள். அதிலே, மதுரை பொன்னுத்தாய் அம்மையார் அவர்கள் அந்த விருதைப் பெற்ற நேரத்தில், அவர்கள் முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்களால் பாராட்டப் பெற்றவர். பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் பாராட்டப் பெற்றவர். நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் தன்னுடைய இளம் பிராயம் முதல் இந்தத் துறையில் இருப்பவர் என்பது மாத்திரமல்ல, அண்மையிலே சில வாரங்களுக்கு முன்பு 'ஆனந்த விகடன்' வாரப் பத்திரிகையில் அவருடைய பேட்டி வந்ததை நான் படித்துப் பார்த்தேன். படித்து முடிக்கின்ற வரையில் தொடர்ந்து அதைப் படிக்க இயலாமல், விழிகளை நீர்த்திரைகள் மறைத்துக் கொண்டன. அப்படிப்பட்ட கலைஞர்களும் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டிய, அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு



**இன்பம் எனப்படுதல் - தமிழ்**
**இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!**



அளிக்க வேண்டிய பொறுப்பு ஒரு அரசுக்கு இருக்கின்றது.

ஐந்து கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில கலைஞர்கள் அவர்களுடைய வாழ்வு மாத்திரம் முக்கியமாகத் தெரிகிறதா என்று யாராவது கேட்பார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது அந்த ஐந்து கோடி மக்களும் சில நேரங்களில் துன்புற்று, துயருற்று இன்னல்களுக்கு ஆளாகிற நேரத்தில் அவர்கள் ஒரு அரை மணிநேரம்- ஒரு மணி நேரம் இவைகளையெல்லாம் மறந்து கலைச் சுவையிலே திளைக்க வைக்கவேண்டிய அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அந்தக் கலைஞர்களுக்கு, இந்த உதவியைச் செய்வது அரசின் சார்பாக மாத்திரமல்ல, ஐந்து கோடி மக்களின் சார்பாகத்தான் என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**'கலை மாமணி' விருது வழங்கும் விழாவில், ஆற்றிய உரையிலிருந்து (14.4.1990)**

# கலைமாமணி விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், 1989-90-ஆம் ஆண்டிற்கான 28 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருதுகள் வழங்கும் விழா, 14.4.90 தமிழ்ப் புத்தாண்டு நாளன்று, சென்னைக் கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

மங்கல இசையுடன் தொடங்கப்பெற்ற இந்த விழாவில், மன்றத் தலைவர் திரு சா. விசுவநாதன் (சாவி) அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்து, கலைஞர்களுக்குப் பொற்பதக்கம் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விருது பெறும் கலைஞர்களுக்குப் பட்டம் வழங்கிப் பொன்னாடை வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சிறந்த கலை நிறுவனத்துக்காக மதுரை ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்துக்கும், சிறந்த நாடகக் குழுவுக்காக, சென்னை ஏ.பி.என். ஆர்ட்ஸ்க்கும் கேடயங்கள் வழங்கினார்.

விருது பெற்ற கலைஞர்கள் சார்பில், கவிஞர் வைரமுத்து நன்றி நவின்றார்.

விழா முடிவில் மன்றச் செயலாளர் கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

பிறகு, வழுவூர் ஆர். சாம்ராஜ் குழுவினர் வழங்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ''சங்கத்தமிழ்'' நாட்டிய நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

## சிறு சேமிப்புத் துறை



# இந்த வரைபடம் உங்கள் வரிப் படம்...

# குறைந்துவிட்டதே!

# தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ.30,000/- வரை 100% வரி விலக்கு பெறுங்கள்.

## தேசிய சேமிப்புத் திட்டம்

| வரிவிலக்கு | உங்கள் முதலீடு |
|---|---|
| வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற | தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/- முதலீடு செய்யுங்கள் |
| வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற | தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/- முதலீடு செய்யுங்கள் |
| வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற | தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- முதலீடு செய்யுங்கள் |
| வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின்கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற | தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள். |
| வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற | தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/ 15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள். |

**தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல்** முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

**சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!**

**தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில் ரூ.1000/- அதற்கு மேலும்** முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

**ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.**

**பரிசுப் பொருட்களின் விவரம்:**

| | |
|---|---|
| 1 சூப்பர் பம்பர் பரிசு | — காண்டஸா கார் |
| 1 முதல் பரிசு | — மாருதி கார் |
| 5 இரண்டாவது பரிசுகள் | — ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள் |
| 10 மூன்றாவது பரிசுகள் | — கலர் டி.வி. |
| 20 நான்காவது பரிசுகள் | — 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர் |
| 100 ஐந்தாவது பரிசுகள் | — குக்கர் |
| 500 ஆறுதல் பரிசுகள் | — குவார்ட்ஸ் சுவர் கடிகாரம் |

மேலும் விபரங்களுக்கு:

**அனைத்து அஞ்சலகங்கள்**

**மாவட்ட ஆட்சித் தலைவர்**
**(அல்லது)**
**மாவட்ட சேமிப்பு அலுவலர்**

**இயக்குநர்**
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

# பாரதிதாசனின் தமிழியக்கம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

**பா**வேந்தன் பாரதிதாசன் தமிழுக்கு ஒரு இயக்க உருவம் கொடுத்த முதற்கவிஞன். ஆம்! தமிழ் ஒரு மொழி! அம்மொழியைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கழகங்களிலும் பயின்றால் போதாது. மக்கள் வாழ்க்கையின் படிநிலை தோறும் தமிழ், இடம் பெறுதல் வேண்டும். சமுதாயத்தின் உறுப்பா கிய ஒவ்வொருவரும் அவரவர் துறை யில் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும். இதுவே தமிழியக்கம்.

தமிழுக்கு- தமிழ் வளர்ச்சிக்கு- தமிழ்ப் பாதுகாப்புக்கு ஓர் இயக்கத் தைக் காண வேண்டிய நெருக்கடி பாவேந்தன் காலத்தில் ஏற்பட்டது; நமது தலைமுறைக்கு ஏற்பட்டது. தமிழ், பல நூற்றாண்டுகளாக சமஸ் கிருதம், உருது, ஆங்கிலம் ஆகிய பல்வேறு மொழிகளின் ஊடுருவலால் தூய்மை கெட்டது; வளர்ச்சி குன்றி யது. சமஸ்கிருதத்தின் ஊடுருவலால் தமிழின் தூய்மை கெட்டது. ஒரு கலப்புத் தமிழ்நடை- மணிப்பிரவாள நடை என்ற பெயரில் தோன்றிப் பயிலத் தொடங்கியது. தமிழ்த் தாயின் திருவுருவில், அம்மை வார்த்த உருவம் போலத் தழும்புகள் தென் படலாயின. எங்கும் கலப்புத் தமிழ். கலப்புத் தமிழ் பேசுபவர்கள் உயர் குடியினர் என்ற ஒரு மதிப்புணர்வு கூட நிலவியது. ஆங்கிலத்தின் ஊடு ருவலால்- மேலாதிக்கத்தால் தமிழ் மொழியின் வளர்ச்சி பாதிக்கப் பட்டது. தமிழ், உலகின் மற்ற மொழிகளைப் போலத் துறைதோறும் வளர முடியாமல் ஆங்கிலம் தடுத்து விட்டது. இந்த நிலையில்தான் பாவேந்தன் பாரதிதாசன் தமிழுக்கு இயக்கம் காண்கின்றான். அவனுடைய வேதனை வெளிப்படுவதை,

''மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது!
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தா னில்லை.''

(தமிழியக்கம் பா:22)

என்ற வரிகள் பாவேந்தன் காலத் துத் தமிழகத்தின் நிலை! இன்று என்ன நிலை? தமிழகத்தில் தமிழ் பயிலத் தொடங்கி உள்ளது. ஆயினும் முற்றாக நாடபெறவில்லை! தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்பமைந்த தமிழ்க்குடிமகன் பெருமுயற்சி எடுத்து வருகின்றார்! அவர்தம் முயற்சி வெற்றி பெறுவதாக!

அடுத்து, தமிழில்- தமிழ் வழி யாக இளைஞர்கள் கற்க வேண்டும். தமிழனின் அறிவு வளர்ந்தாலே அவனுடைய தாய்மொழியாகிய தமிழும் உயரும்; வளரும். இன்று, தமிழ் வழிக் கல்வி உண்டு. ஆனால், தமிழ்வழிக் கல்வி ஏழைகள் கற்கின் றனர்! ஆங்கில வழிக்கல்வி ஆளும் இனத்தினர் பழக்கித் தந்தனர். இந்த நிலை அடியோடு மாறவேண்டும். அறிவியலில் துறைதோறும் தமிழ் வளர்தல் வேண்டும். அப்போது தான் தமிழன் அறிஞனாவான். தமிழ், அறிவியல் தமிழாக வேண்டும்! உலகத்தின் பல்வேறு மொழிகள் முன்னேறுவது போல், தமிழ்மொழி யும் முன்னேற வேண்டும் என்பது பாவேந்தரின் விருப்பம்.

தமிழ், காலத்தால் மூத்தது; கருத் தாலும் மூத்தது. கடவுள் என்ற சொல்லே, தமிழ்ச் சொல்தான். இது பொருள் நிறைந்த தமிழ்ச் சொல்! தமிழினம் மெய்ப்பொருள் நெறி கண்ட இனம். விண்ணளந்து காட்டி வினைமறைக்கும் எண்ணற்ற திருக்கோயில்கள் கண்ட இனம், தமிழ்இனம், இறைவன் தமிழ்மீது தணியாக் காதல் உடையவன். காசு கொடுத்துத் தமிழ் கேட்கும் பெரு விருப்பம் சிவனுக்கு உண்டு! ஏன், கொற்றாளாக மண்சுமந்தும் பண் சுமந்த தமிழ்கேட்கும் விருப்பினன். திருமாலோ, பைந்தமிழ்ப் பின்சென்ற பெருமைக்குரியவன். ஆயினும் ஏன்? கருவறைக்குள்ளே தமிழ் இல்லை! தமிழ் நுழைய முடிய வில்லை! இந்த வேதனையைப் பாவேந்தன்,

''சொற்கோவின் நற்போற்றித்
திரு அகவல் செந்தமிழில்
இருக்கும் போது,
கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு
சகத்ர நாமம்?
தெற்கோதும் தேவாரம்
திருவாய்நன் மொழியான
தேனி ருக்கச்
செக்காடும் இரைச்ச லென
வேதபா ராயணமேன்
திருக்கோ யில்பால்?

(தமிழியக்கம்.பா:59)

என்று வேதனையோடு கேட்கின் றான்: பாவேந்தன் பாரதிதாசன் வினாவிற்கு இன்னும் முழுதாக விடை கிடைக்கவில்லை! மெல்லத் தமிழ்த்தாய், திருக்கோயிலுக்குள் ''தமிழிலும்'' என்ற இழிநிலையைச் சுமந்து கொண்டு நுழைந்தாள்! நெருக்கடி நிலை வந்தது! அதுவும் இல்லாமற் போயிற்று! இங்கும் அங்கும் சில உத்தமர்கள் தமிழில் அருச்சனை செய்கின்றனர்! தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் தமிழே வழிபாட்டு மொழியாக இருத்தல் வேண்டும். அருச்சனை மொழியாக இருத்தல் வேண்டும். இப்பணி எப்பணிக்கும் முதற்பணி!

தமிழ்நாட்டுக்குத்தமிழாராய்ந்த ஒரு தலைமகன முதலமைச்சராதல் வேண்டும் என்பது பாரதிதாசன் விருப்பம்; இன்று நிறைவெய்தியிருக் கிறது. நற்றமிழ்த் தலைவர், உயர் தமிழ்க் கவிஞர், தமிழாராய்ந்த அறிஞர், முத்தமிழாக- முழுச் சொத் தாகத் தமிழ்நாட்டுக்கு வாய்த்த மாண்பமைந்த கலைஞர் முதலமைச்சராக அமர்ந்துள்ளார். பாரதிதாசன் நூற்றாண்டு விழாப் பணிகளுடன் தமிழியக்கப் பணிகளும் முடுக்கி விடப் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது!

தமிழ்எங்கள் உயிர்என்ப தாலே- வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம்-



# பாவேந்தர் பாரதிதாசன்

## நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழு

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 8.4.90 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுவில் இடம்பெற்றுள்ள பெருமக்கள்:

மாண்புமிகு முதல்வர் கலைஞர்
மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் திரு. கே.என். நேரு
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்
திரு எஸ்.ஆர். இராதா, எம்.எல்.ஏ.,
திரு குமரி அனந்தன், எம்.எல்.ஏ.,
முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம்
புலவர் கா. கோவிந்தன்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
திரு கி. வீரமணி
திரு மன்னை ப. நாராயணசாமி
திரு மன்னர் மன்னன்
திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப.,
டாக்டர் ஔவை நடராசன்
டாக்டர் வா.செ. குழந்தைசாமி
முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
டாக்டர் ச. முத்துக்குமரன்
திரு சிவாஜி கணேசன்
டாக்டர் மா. நன்னன்
டாக்டர் எஸ். அப்துல் ரகுமான்
திருமதி அரசு மணிமேகலை
டாக்டர் மா. செல்வராசன்
கவியரசர் பொன்னிவளவன்
கவிஞர் சுரதா
கவியரசு முடியரசன்
கவிஞர் வைரமுத்து
கவிஞர் பொன்னடியான்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
டாக்டர் திருமதி சிவகாமசுந்தரி
திருமதி நிர்மலா சுரேஷ்
டாக்டர் பு.பா. இராஜஇராஜேஸ்வரி
டாக்டர் சு. செல்லப்பன்
முனைவர் தமிழண்ணல் (ராம.பெரிய கருப்பன்)
டாக்டர் க.ப. அறவாணன்
முனைவர் பா. வளன் அரசு
கவிஞர் தி. முருகுசுந்தரம்
புலவர் சா. மருதவாணன்
புலவர் மு. அருச்சுனன்
கவிஞர் கோவை இளஞ்சேரன்
திரு புலவர் புலமைப்பித்தன்
கவிஞர் அரிமதி தென்னகன்
டாக்டர் மு. நாகநாதன்
திரு கி. இராஜமாணிக்கம், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
உறுப்பினர்-செயலர்
திரு எஸ். வேணுகோபால ரெட்டி
திரு கே.பி.கே. நம்பியார்
திரு கே. சொர்ணம்.



தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை; தமிழ்நாடு; தமிழ மக்கள்,
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பட்டு வகைகள்




100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

# கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23











முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் 8.4.90 அன்று தலைமைச் செயலகத்தில் கூடிய பாவேந்தர் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுக்கூட்டம்.